Registered as a News Paper at the G. P. O. Sri Lanka' Under No QB/8965/78

# ஐக்கியதீபம்

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங் | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச. | 10 |
| கடன் முறி ஐ. நா ச. | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |


மலர்: 34 ஆண்டுச் சந்தா: 3-50 விலை சதம் 25

(புதிய தொடர்) மார்கழி 1978 இதழ் 7

# சமாசத்தின் ஏற்றுமதியில் வளர்ச்சி

## கூடுதலான அன்னிய செலாவணி கிடைத்தது

வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 1978 டிசம்பர் இறுதிவரை 2025 அந்தர் 95¾ இறுத்தல் கடலட்டைகளையும் 219311 அந்தர் சங்குகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ 10,771,896/12 சதத்தை அன்னிய செலாவணியாகப் பெற்றுள்ளது.

1977 ம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை மேற்படி சரக்குகளை ஏற்றுமதி செய்ததால் பெற்ற அன்னிய செலாவணியைவிட இது அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

1977 ம் ஆண்டில் 1573 அந்தர் 61½ இறுத்தல் கடலட்டைகளையும் 8526 அந்தர் சங்குகளையும் ஏற்றுமதி செய்ததன்மூலம் ரூ 4,031,077/56 சதத்தை மேற்படி சமாசம் செலாவணியாகப் பெற்றது.

1978 டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 326 அந்தர் 92 இறு கடலட்டைகளை ஏற்றுமதி செய்ததால் ரூ 19,47,55/18 சதத்தை அன்னிய செலாவணியாகக் குறித்த சமாசம் இப்போது பெற்றிருக்கிறது.

## கூட்டுறவு உயிர் நாடி

நாட்டின் பொருளாதார சமூக வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கம் உயிர் நாடியாக விளங்குகின்றது.

இவ்வாறு புலோலி ப. நோ. கூ. சங்க உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவர் திரு. த. பூ. முருகையா குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கிற்கு சங்கத் தலைவர் திரு. சு. கந்தையா தலைமை வகித்தார்.

திரு. முருகையா தொடர்ந்து பேசுகையில் சங்கத்தின் வளர்ச்சியிலே தான் நாட்டின் வளர்ச்சியும் முன்னேற்றமும் தங்கியிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

தேசிய கூட்டுறவுச் சபையின் பதவிநிலை உத்தியோகத்தர் திரு. K. கணேசலிங்கம் உரை நிகழ்த்தும் போது கூட்டுறவுச் சங்கங்களின் செலவுகள் இப்போது அதிகரித்து வருகின்றது ஆனால் அச் செலவுகளைச் சமாளிக்க வருமானம் போதாதிருக்கின்றது. இந்நிலையில் இயக்குநர் சபை செலவுகளைக் கட்டுப்படுத்தி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

யாழ் மாவட்டக் குழுச் செயலாளர் திரு இ சுப்பிரமணியம் பேசுகையில் சங்கத்தின் உச்ச நிருவாகம் அங்கத்தவர் அடங்கிய பொதுச்சபை என்றும் சங்க நிருவாகத்தைத் திறம்பட நடாத்துவதற்கென பொதுச்சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற இயக்குநர் சபை நிருவாகத்தைத் சிறப்பாக நடாத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் இயக்குநர் சபையின் திறமையிலும், நேர்மையிலும் கடின உழைப்பிலும் சங்கத்தின் வெற்றி தங்கியிருக்கின்றதென்று குறிப்பிட்டார்.

## தற்காலிக ஊழியர்கள் - பணியாளர்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை

கூட்டுறவு நிறுவனங்களிலே வேலை பார்க்கும் தற்காலிக ஊழியர் குறித்து கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு பின்வரும் சுற்றறிக்கையைச் (சுற்றறிக்கை இல 87/78) சங்கங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது:

20-8-78ல் அனுப்பப்பட்ட எனது சுற்றறிக்கை இல. 50/75, 15-11-76ல் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை இல. 61/76 ஆகியவற்றை உங்கள் தயவான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இச்சுற்றறிக்கை அமைய அல்லது நாளாந்த சம்பள அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பவர்களை உள்ளடக்காது என்று உதிக்கப்படல் வேண்டும். இத்தகையவர்கள் ஈடுபட்டிருக்கும் வேலை முடிவுற்றதும் அவர்கள் பணியாளர்களாக இல்லாது போய் விடுவதுடன் தாம் ஆற்றிய சேவைகளுக்கு நட்ட ஈடு கோருவதற்கு எதுவித உரிமையும் அற்றவர்கள் ஆகின்றனர்.

தற்காலிக பணியாளர்கள் என்பவர்கள் கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட பணியாளர் பட்டியல் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் என்ற போதிலும் சங்கத்தில் இடையீடு இன்றி நியாயமான காலத்திற்கு வேலை பார்ப்பவர்கள். வழக்கமாக இத்தகைய பணியாளர் மாதாந்த அடிப்படையில் சம்பளம் பெறுபவர்கள், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தற்காலிகப் பணியாளர் தொடர்ந்து வேலைக்கு அமர்த்தப்படலாகாது அவர்களது வேலை திருப்திகரமாக இருப்பின் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் இல்லாவிடின், நிறைவுற்ற ஒவ்வொரு ஆண்டுச் சேவைக்கும் ஒவ்வொரு மாதச் சம்பளம் நட்ட ஈடாக வழங்கி அவர்களது சேவை நிறுத்தப்படல் வேண்டும்.

25-1-78ல் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை இல. 82/8 இத்தால் ரத்து செய்யப்படுகின்றது.

## முகாமை பற்றி சர்வதேச கருத்தரங்கு

அண்மையிலே உயர்மட்ட முகாமைப் பணிகள் பற்றியும் நெறியாளர் சபைக்கும், முகாமையாளர்களுக்குமிடையே உள்ள உறவுகள் குறித்தும் சர்வதேச கூட்டுறவு கருத்தரங்கொன்று மேற்கு அவுஸ்ரேலியாவிலுள்ள பேர்த் என்னும் நகரில் நடைபெற்றது.

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனமும் அவுஸ்ரேலியாவின் கூட்டுறவுச் சம்மேளனமும் அவுஸ்ரேலிய அரசாங்கமும் கூட்டாக நடாத்திய இக்கருத்தரங்கின் நோக்கங்களாவன: தெரிவு செய்யப்பட்ட நெறியாளர் குழுவின் பணிகளை ஆராய்தல், பிரதம நிறைவேற்றுத்துறை அதிகாரி உட்பட உயர்மட்ட முகாமைப் பணிகளை ஆராய்தல்.

பங்களாதேஷ், இந்தியா இந்தோனேஷியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர் அனைத்துலக இணைப்பு நிறுவனத்தின் தென்கிழக்காசிய துணை நெறியாளர் திரு M K பூரியும இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

இக்கருத்தரங்கைத் தொடக்கிவைத்த அவுஸ்ரேலிய கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு. ஹன்டர் பேசுகையில் கூறியதாவது: வெவ்வேறு நாடுகளில் நிலவும் மாறுபட்ட பொருளாதார, சமூக அமைப்புக்களின் விளைவாக சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேவ்வேறு வழிகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். எனினும் சமூகத் தேவைகளுக்கும், வணிகத் தேவைகளுக்கும் கூட்டுறவுத் தத்துவத்தைப் பயன்படுத்துவதாலெம்மிடையே

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

(முற்றொடர்)

# இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் சேவைகள்

D. M. ஸ்கொட்

குறிப்பாக கடந்த 20 ஆண்டுகளிலே நிகழ்ந்த இந்த நிறுவன மாற்றங்கள் அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தினுல் ஏற்படக்கூடிய சமூக அபிவிருத்தியைவிட அவ்வியக்கத்தின் பொருளாதார அபிவிருத்தியையே அழுத்தியது என ஓரளவிற்குக் கொள்ளலாம் பொருளாதார ஈடேற்றத்திலேயே சமூக அபிவிருத்தி தங்கியுள்ளது; வெற்றிகரமாக இயங்கிய கூட்டுறவுச் சங்கங்கள் சமூக குறிக்கோள்களை எய்தியமைக்கு பல உதாரணங்கள் உள. பின்னர் தரப்படவிருக்கும் இவ்வுதாரணங்கள் ப.நோ கூ சங்க வகையைச் சார்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது ப.நோ. கூ.ச. கூட்டுறவு முயற்சிகள் சகலவற்றையும் தன்னுள் அடக்கும் வகையில் நிறுவப்பட்டமை மனம் கொள்ளத்தக்கது. எனினும், பெரும்பாலான ப.நோ.கூ. சங்கங்கள் பொதுப்படையாக பொருளாதார ரீதியாகப் பலவீனமுற்றிருந்ததால் சமூக சேவைகளை வழங்குவதற்கு அவற்றால் முடியவில்லை– இத்தகைய பொது நல சேவைகளைத் தாம் வழங்க வேண்டும் என்று உணர்ந்த போதிலும்;

மேலே குறிப்பிட்ட நிறுவன மாற்றங்கள் தவிர அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கையின் இன்னொரு அம்சமும் உறுப்பினர்களுக்கும் அவர்களது சங்கங்களுக்குமிடையே உள்ள இடைவெளியை மேலும் விரிவடையச் செய்தது: அரசாங்க நியமன முறைஇ ப.நோ.கூ. சங்கங்களிலும் பெரும்பாலான ஏனைய பாவனையாளர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் அரசாங்கம் நெறியாளர்குழு உறுப்பினர்களை நியமித்து வந்ததுஇ 1971ல் அப்பொழுது ஆட்சிபுரிந்த அரசாங்கம் தேசிய அபிவிருத்தியில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கினை அழுத்தும் நோக்குடன் நெறியாளர் குழுக்களுக்கு 9பேரை நியமிக்க முடிவு செய்தது. ஐந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஓர் உறுப்பினர் பணியாளரின் பிரதிநிதியாக இடம் பெற்ருர். ஆரம்பத்திலே இந்த ஒழுங்கு ஓர் ஆண்டு காலத்திற்கு மட்டும்தான் என உத்தேசிக்கப்பட்ட போதிலும் அந்த அரசாங்கத்தின் காலம்முடிவுறும்வரை (1977 நடுப்பகுதி) இந்நிலை மாறவில்லை.

இப்பொழுது ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் கொள்கை கூட்டுறவுச் சங்கங்களிலே படிப்படியாக உறுப்பினர்களின் குடியாட்சிப்பாங்கான கட்டுப்பாட்டை மீண்டும் நிலை நிறுத்துவதே. சமூகக்குறிக்கோள்களை எய்துவது உட்பட உண்மையான கூட்டுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு இது இன்றியமையாத முதற்தேவைஎனக் கருதப்படுகின்றது. கூட்டுறவு இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு இது தேவையான நடவடிக்கை. பொருளாதாரப்பலமே முகற் குறிக்கோளாய் இருத்தல் வேண்டும், அப்பொழுதுதான் சமூகத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு வாய்ப்புண்டுஇ முன்னர் எதிர்பார்த்ததை விட இம்மாற்றத்தினை அவ்வளவு விரைவாகஏற்படுத்த முடியாதபோதிலும் ஈற்றிலே வளர்ச்சி வேகமுறும். ஏனெனில், நாட்டின் கல்வித் தராதரங்கள் ஏற்கெனவே உயர்வானவையாக இருப்பதனால் சங்கங்கள் குடியாட்சிப் பாங்கானவையாய் ஆக்கப்பட்டதும் உறுப்பினர் கல்விக்கான திட்டங்களை (குறிப்பாக இளம் உறுப்பினர்களுககும் புதிய உறுப்பினர்களுக்கும் வகுப்பது இன்றியமையாததுஇ இதன்மூலந்தான் உண்மையான கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய அறிவும் உறுப்பினர்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு சங்கங்களின் பொறுப்பும் ஊட்டப்படுவதை உறுதிப் படுத்தலாம்இ

அரசாங்க உதவி

கூட்டுறவு இயக்கத்திற்கு அரசாங்கம் வழங்கும் முக்கிய உதவி (குறிப்பாக சமூக நோக்கங்களுக்காக இல்லாதபோதிலும்) கூட்டுறவுத் திணைக்களத்தினூடாகப்பாய்ச்சப்படுகின்றது ஏற்கெனவே குறிப்பிட்டது போல கணிசமான அளவு கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆலோசனைகள் வழங்குகின்றனர், இவர்களில் பெரும்பாலோர் நிரந்தரமாக பெரிய சங்கங்களில் குறிப்பாக ப.நோ கூ சங்கங்களில் கடமை பார்க்கின்றனர்; இத்துடன் கூட்டுறவுத் திணைக்களம் கட்டுப்பாட்டினையும் வகித்து வருகின்றது: நெறி ஆணைகளின் ஊடாகவும் கணக்குப் பரிசோதனை நடவடிக்கைகளினூடாகவும் (தனியார் துறை கணக்காய்வாளர்களால் கணக்குப் பரிசோதனை செய்யப்படும் ஒருசில மிகப் பெரிய சங்கங்களைத் தவிர இலங்கையிலுள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும்—இவற்றின் தொகை 7455—திணைக்களத்தினுல் கணக்குப் பரிசோதனை செய்யப்படுகின்றன.) கூட்டுறவுத் திணைககளம் இக்கட்டுப்பாட்டினை மேற்கொள்கின்றது.

இத்தகைய அரசாங்க உதவியின் பெரும்பகுதி பொருளாதார செயற்பாடுகளை இலக்காக கொண்டிருக்கின்றது; இதன் பயனுக சம்பந்தப்பட்ட சங்க உறுப்பினர்களின் வாழ்க்கை நிலைமை மேம்பாடு அடைந்துள்ளது. இதற்கு தரப்பட்ட ஓர் உதாரணம் காய்கறி உற்பத்தியாளரின் விளைபொருள்களை ப. நோ. கூ. சங்கத்தினூடாகச் சந்தைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட புதிய ஒழுங்கு இதன் மூலம் அவர்களது விளை பொருள்களுக்கு கூடிய வருமானத்தைப் பெறக்கூடியதாய் இருந்தது. முன்னர் இவர்கள் குறைந்தவிலைக்கு தரகர்களுக்கு தமது விளை பொருள்களை விற்க வேண்டிய நிர்ப்பந்தம் நிலவியது; வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு வீட்டிலே மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் குறித்து திணைக்களப் பரிசோதகர்கள் ஆலோசனை வழங்கியதோடு கூட்டுறவு வீடமைப்புச் சங்கங்களுக்கு காணி பெறுவதற்கும் அவர்கள் உதவி புரிந்தனர்.

(வளரும்)

# இலங்கைத் தேங்காய்த் துருவல் கைத்தொழிலின் எதிர்காலம்

எஸ் ஏ சி. எம். சுஹைல்

தேங்காய் உற்பத்தி வருடாந்தம் 270 கோடியிலிருந்து 270 கோடி காய்கள் வரை தளம்பிச் செல்வது வழமையாகும், ஆனுல் 1972-ல் வழமைக்கு மாருக உற்பத்தி 296·3 கோடி காய்களாக அதிகரித்தது; இவ்வதிகரிப்பிஃப் போலவே 1974லும் (203,1 கோடி), 1977லும் (181.5 கோடி) பாரிய உற்பத்தி வீழ்ச்சியும் காணப்பட்டது. காலநிலை, பசளைப் பிரயோகத்தில் உள்ள வேறுபாடு என்பன இத்தளம்பலுக்குக் காரணமாகவிருப்பதுடன், தேங்காய்த் துருவல், தும்பு, எண்ணெய் சிரட்டைக்கரி, கொப்பரா போன்ற தெங்குப் பொருட்களின்வெளிநாட்டுச்சந்தை நிலைமைகளிலும் இது தங்கியுள்ளது. தேங்காய் உற்பத்தியைப் பொறுத்த வரைக்கும் 1972, 1974ம் ஆண்டுகள் வழமைக்கு முரணனவையாகும். 1965—77 காலகட்டத்தை நோக்குமிடத்து, 1971ல் நிலவிய சாதகமான காலநிலை காரணமாகவும், 1972ல் தென்னந் தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பசளைப் பிரயோகம் காரணமாகவும் தேங்காய் உற்பத்தி 295 3 கோடி காய்களாா இருந்தது. தேங்காய் உற்பத்தியில் இது பெரும் சாதனையாகும் இதற்கு மாருக 1974ல் உற்பத்தி 296.1 கோடி காய்களாக வீழ்ச்சியடைந்தது. இவ்வருடத்தில் நிலவிய வறட்சியும், நிலச்சீர் திருத்தத்தின் கீழ் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டு வந்தமையால் தோட்ட முகாமை காட்டிய அசிரத்தையும் இதற்குப் பிரதான காரணங்களாக இருந்தன.

தற்போதைய போக்கிலிருந்து 1980லும்இ 1990லும் தேங்காய் உற்பத்தி முறையே 237.4, 223 கோடி காய்களாக இருக்குமென ஊகிக்க முடியும். 1975ல் பெறப்பட்ட 244 7 கோடி உண்மையான உற்பத்தியுடன் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியை ஒப்பிடுமிடத்து, 1980ல் 3சதவீத வீழ்ச்சியையும் எதிர்பார்க்கலாம்.

## உள்நாட்டு நுகர்வு

உள்நாட்டு வருடாந்த தேங்காய் நுகர்வு தலைக்கு 135 காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்கால சனத்தொகை எறியங்களை நோக்குமிடத்து 1973—1990 காலகட்டத்திற்கான தேங்காய் நுகர்வு தொடர்ந்தும் அதிகரித்தல் வேண்டும். இதே கணிப்பீட்டு மூலாதாரங்களின் பிரகாரம் உள்நாட்டு நுகர்வு 1980ல் மொத்த உற்பத்தியில் 71.5 சதவீதமாகவும், 1990ல் 79 சதவீதமாகவும் இருக்கும்; கைத்தொழில் உற்பத்திக்கும், ஏற்றுமதிக்கும் 1990ல் 28.5 சதவீதத்தினையும், 1990ல் 21 சதவீதத்தினையும் மட்டுமே பயன்படுத்தலாம்இ

## தேங்காய்த் துருவல் ஏற்றுமதி

ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் பிலிப்பைன்சின்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# சுவடுகள்

## முல்க் ராஜ் ஆனந்தின் நாவலும் மகாத்மா காந்தியும்

முல்க்ராஜ் ஆனந்தின் எழுத்துக்களில் அநேகமாக மகாத்மாகாந்தி, நேரு, மாக்ஸ் ஆகியோரின் கருத்துக்கள் ஆட்சி செலுத்துவதைக் காணலாம்.

'தீண்டத்தகாதவர்' (The Untouchable) என்ற நாவலே முதலாவதாக வெளிடப்பட்ட அவரது நாவலாகும்.

அதனை ஆனந்த் எழுதி முடித்ததும் மகாத்மா காந்தியிடம் அபிப்பிராயம் கேட்பதற்காக கையெழுத்துப் பிரதிகளை அவரிடம் கொண்டு சென்ருர்.

ஆனந்த் காந்தியடிகளிடம் நாவலின் சுருக்கத்தை முதலில் கூறினுர். அதன் அடிப்படைக் கருத்து மகாத்மாவை மிகவும் கவர்ந்து விட்டது.

ஒரு வாரத்திற்கு மேலாக ஆனந்த் காந்தியடிகளின் அருகே அமர்ந்திருந்து அந்த நாவலை வாசித்தார். அனேக பக்கங்களைக் கொண்ட அந்த எழுத்துப் பிரதிகளிலே ஆங்காங்குள்ள சுவையினைக் குறைக்கும் நீண்ட பகுதிகளையும், தன் கொள்கைக்கு முரண்பட்ட கருத்துக்களையும் மகாத்மா காந்தி எடுத்துக் கூறிஆட்சேபித்ததோடு தெளிவான விளக்கங்களை அளித்து அவற்றினை நீக்கும்படி கூறினுர். ஆனந்த் அவருடைய விளக்கங்களை ஏற்று அவர் குறிப்பிட்ட பகுதிகளை வெட்டினுர். கடைசியாக நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்கள் வெட்டப்பட்டன.

இதன் பின்பு அந்த நாவல் நூல் வடிவில் வெளியானதும் பொது மக்களிடையே அதற்குப் பரபரப்பான வரவேற்பு உச்ச நிலையை அடைந்து.

அந்த நாவல் ரஷ்ய மொழி உட்பட பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்தியப் பிரயாணம் A Passage India

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# கூட்டுறவுத் தந்தை

# ரொபேட் ஓவன்

''என் வாழ்க்கை பயனற்றதாகிவிடவில்லை. முக்கியமான சில உண்மைகளை நான் உலகுக்கு எடுத்துக் கூறினேன்..... நான் என்னுடைய காலத்தை விடவும் முந்தியவனாக இருந்தேன்'' என்று தனது மரணப் படுக்கையில் கூறிய ரொபேட் ஓவன் நவீன கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.

வேல்சில் நிவ்டவுன் நகரில் 1771ல்பிறந்த ஓவன் முப்பது வயதடைய முன்னரே வர்த்தகத்தின் மூலம் பெருந்தொகையான செல்வத்தைக் குவித்துக்கொண்டார். திருமணத்தின் மூலம் நிவ் லனார்க்கில் அமைந்திருந்த பெரிய கைத்தொழில் ஆலைகளின் சொந்தக்காரரானார். இதன் பின்னர் பிரித்தானியக் கைத்தொழில் வட்டாரங்களின் அதிர்ச்சிகளை ஏற்படுத்திய பிரதான மாற்றங்களை அவர் கொண்டு வந்தார். தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதே அவரது இலட்சியமாக இருந்தது. அந்தக் காலத்து ஐந்து வயதுக்கு மேற்பட்ட பெருந்தொகையான சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். சிறுவர்களை ஆலைகளில் சேர்த்துக் கொள்வதை அவர் நிறுத்தியதுடன், அவர்களுக்காகப் பாடசாலைகளையும் ஆரம்பித்தார்.

பதினைந்து வருடத்துக்கும் மிகக் குறைந்த காலத்தில் நிவ்லனார்க் ஐரோப்பாவெங்கும் பிரபல்யம் பெற்றது. ஓவன் அறிமுகப்படுத்திய சமூகக் கருத்துக்கள் இன்று உலகெங்கணும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன; ஆனால் இக் கருத்துக்கள் அவர் வாழ்ந்த காலத்தில் புரட்சிகரமானவையாக இருந்தன. ''உழைக்கும் வர்க்கத்தின் புதுயுக உதயத்தை''க் காண 1815க்கும் 1835க்குமிடைப்பட்ட காலத்தில் 20,000 பேர் நிவ்லனார்க்கு விஜயம் செய்தார்கள். 1820 அளவில் அவர் ஒரு சமூக சீர்திருத்த வாதியாகவும், வெற்றிகரமான கைத்தொழில் அதிபராகவும் புகழ்பெற்றார். தொழிலாளர்களுக்கு சகல வசதிகளையும் வழங்கி அவர்களது வாழ்க்கை நிலைமைகளை வியப்பூட்டுமளவுக்கு விருத்தி செய்த பின்வரும் கூட ஓவன்வர்த்தகத்தினால் பெருந் தொகைச் செல்வத்தைச் சேர்ந்தார். முதலாளித்துவத்தையும் பாரம்பரிய வர்த்தக நடவடிக்கைகளையும் அவர் வன்மையாகக் கண்டித்தார்.

தன்மதத்தைத் துறந்து தேவாலயத்துக்கு எதிரான அவர் மதகுருமாரினதும் கிறிஸ்தவ பக்தர்களினதும் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் தன் பணிகளை மேற்கொண்டார்.

அவர் வாழ்ந்த காலத்தின் பின்னணியிலேயே நாம் ரொபேட் ஓவனின் வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பிட வேண்டும். மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் தொழிலாளர், பெண்கள், சிறுவர்கள் போன்ற உழைப்பாளிகளுக்கும் இருண்ட ஆலைகளுக்கும், அவர்களது உழைப்பைச் சுரண்டிய ஆலையதிபர்களுக்குமிடையே இடைவிடாத ஒரு போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த காலமது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல்அரைப் பாகத்தில் தனி மனிதனை நின்று பலம் குறைந்த சமூகப் பிரிவினருக்காகவும், ஒடுக்கப்பட்ட உழைப்பாளர் வர்க்கத்துக்காகவும் அவர் குரலெழுப்பினார் நீதியினதும் மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டதுமான சமுதாய ஒழுங்கொன்றைக் கட்டியெழுப்புவதற்காக அவர் தன் வாழ்நாளையும், செல்வத்தையும் தியாகம் செய்தார்.

1824ம் ஆண்டு ஓவனின் வாழ்க்கையில் ஒரு மைல் கல்லாக இருந்தது இது வரை காலமும் அவர் சமூக சீர்திருத்த வாதியாகவே இருந்தார்; இதன் பின்னர் சமூகத்தை முழுமையாக மாற்றியமைக்க விரும்பும் ஒரு இலட்சியவாதியாக அவர் மாறினார் இன்றைய பதப்பிரயோகத்தில் பலருக்கு அவர் ஒரு கம்யூனிஸ்டாகத் தெரியலாம்; ஆனால், சுயதேவைப் பூர்த்தியடைந்த, சுயமாக அபிவிருத்தியடையும் ''கூட்டுறவுக் கிராமச் சமூகங்களை'' உருவாக்குவதே அவரது இலட்சியமாக இருந்தது. கூட்டுறவு உற்பத்தியாலும், போட்டியற்ற வாழ்க்கையாலும் சமூக இணக்கத்தையும், அபிவிருத்தியையும் கொண்டு வரலாமென்பதில் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார்.

1832 அளவில் ''கூட்டுறவுக் கிராமங்களை'' உருவாக்கும்நோக்கில் 500க்கும் அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் பிரித்தானியாவெங்கும் தாபிக்கப்பட்டிருந்தன. அநேகமாக இச்சங்கங்கள் யாவும் வீழ்ச்சியுற்ற போதிலும், எஞ்சியொன்றிலிருந்தே வரலாற்றுப் புகழ் பெற்ற ''ரொச்டேல் முன்னோடிகள் சங்கம்'' தோற்றம்பெற்றது. ''ரொச்டேல் முன்னோடிகள்'' ஓவனைத் தம் வழிகாட்டியாகவும், தீர்க்கதரிசியாகவும் கருதினர்.

நவீன கூட்டுறவு இயக்கத்துக்குக் கருக்கொடுத்த இப் போராளியின் இறுதி நாட்கள் துயரம் மிகுந்தவையாக இருந்தன. அவர் தன் சொத்துக்கள் முழுவதையும் இழந்து அனாதையானார். தான் தன் காலத்தை விடவும் முந்திப் பிறந்துவிட்டதாகச் சொன்னார். ''நல்லெண்ணத்துடன் சகலரும் ஒன்றிணைந்து பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வது சர்வதேச மனித சமுதாயத்தின் அதிர்ஷ்டமாகும்.

பிரித்தானிய கூட்டுறவு இயக்கம்இந்தவாசகங்களை ஓவனின் கல்லறையில்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

(முற்றொடர்)

# வர்ணா நகரில்

# கூட்டுறவு இயக்கம்

ஊதிய சேமிப்புத்திட்டத்தின் அடிப்படையில், (இது கூட்டுறவு சர்க்கரை ஆலையின் திட்டம்) பணியாளர்கள் சேமிக்கும் பழக்கத்தைத் தங்கள் வாழ்க்கை முறையாகவே கொண்டுள்ளார்கள் மாதத்திற்கு 13 ஆயிரம் ரூபாய் சேமிப்பாக வருகிறதாம்.

**அப்பளம்**

'சென்னை நகரில் 'லிஜ்ஜத் அப்பளங்கள்' மிகவும் பிரபலமானவை, இவற்றின் தாய் வீடு இந்த வர்ணா நகர்தான் ஆம் சர்வோதயக் கொள்கைகளைத் தம் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும்இப்புண்ணிய பூமியில் 17 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த அப்பளத் தயாரிப்பு நடைபெற்று வருகிறது.

'மஹிளா க்ரிக் உத்யோக் லிஜ்ஜத் பப்பட்' என்பது அதன் பெயர். கூட்டுறவின் அடிப்படையில் அமைந்த இந்த அப்பளத் தயாரிப்புகள், உள்ளூரில் விற்பது மட்டுமன்றி, உலகின் பல பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1959-ல் 3,600 பெண் உறுப்பினர்களுடன் தோன்றிய இந்த அமைப்பு இன்று 50 லட்சம் ரூபாய் அளவுக்கு வர்த்தகம் செய்து வருகிறதென்றால், இதன் சிறப்பான நடவடிக்கைகளை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்! (ஆண்டுக்கு 40 லட்சம் ரூபாய் மொத்த வருமானத்தை இது எதிர்பார்க்கிறது ).

உண்மையான கூட்டுறவுக்கு இந்த நிறுவனம் ஓர் உன்னத எடுத்துக்காட்டாக மக்கள் முன்உள்ளது. லாபமோ—நட்டமோ—அதனை உறுப்பினர்கள் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்கிறார்கள். சிரித்தால் சேர்ந்து சிரிக்கும் உலகம் அழுதால் ஒருவனைத் தனியே நிறுத்திவிடுகிறது இது இங்கு இல்லை. வாழ்விலும் தாழ்விலும் ஒரே ஐக்கியம்! ஆண்கள் இந்த அமைப்பில் உறுப்பினராகச் சேர இயலாது; பெண்களே தனித்து நடத்தி புகழ் ஈட்டலாம் என்பதற்கும் இந்த மகளிர் அமைப்பு ஒரு சான்று. வர்ணா நகர் தலைமை அதிகாரியின் துணைவியார் இந்த மகளிர் கூட்டுறவு அமைப்பின் தலைவியாவார்.

சமூக, கலாசார, சேளிக்கை அம்சங்களுக்கென்று ஒரு மண்டபமும் வர்ணா நகரில் அமைக்கப்பட்டுள்ளது 'சாஸ்திரி பவன்' என்று அதனை அழைக்கிறார்கள். வளர்ந்துவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் கருத்துடன், நவீன வசதிகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கல்விப் பணியிலும் ஒரு புரட்சி**

இனி இந்த வர்ணா நகரப் பகுதியின் கல்விச் சாலைக்கு வருவோரும். பெரும் பெரும் நகரங்களில் இல்லாத அளவில், இங்குள்ள கல்லூரியில் பல வசதிகள் அமைந்துள்ளன. 'ஒருமாபெரும் பல்கலைக் கழகமோ இது!' என்றே ஒருவரைச் சிந்திக்கச்செய்யும் தன்மையை உடையது இந்தக் கல்லூரி. மாணவர்கள் பயிலுவதற்கு ஏற்ற சூழ்நிலை, புத்தக வங்கி, மாணவர்களின் ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்ய எந்நேரமும் விழிப்பாயிருக்கும் ஆசிரியர் குழாம் இப்படி எத்தனை எத்தனையோ வசதிகளை இந்தக் கல்லூரி பெற்றுள்ளது.

இன்னொரு சிறப்பம்சம்: இதனை மற்ற கூட்டுறவு அமைப்புகளும் ஒரு முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் ஏழை மாணவர்கள், தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவிடவும், அதன் மூலம் ஊதியம் பெறவும் நல்ல வசதிகளையும் அமைத்துத் தந்துள்ளது கல்லூரிக்குச் சொந்தமான பண்ணையில் இந்த ஏழை மாணவர்கள் வேலை செய்து மாதம் ஒன்றுக்கு 40 பாய் சம்பாதிக்கின்றனராம். கல்லூரியும், அதன் சுற்றுப்புறமும் மாணவர்களாலேயே துப்புரவு செய்யப்படுகிறது இதைவிட ஆச்சரியமான செய்தி வேறேது? பழைய காலத்தில் நடைபெற்று வந்த குருகுலக் கல்வி முறையை யன்றோ நமக்கு இது நினைவூட்டுகின்றது!

கரும்புச் சாகுபடியாளர்களின் வாழ்க்கையை உயர்த்தச் சர்க்கரை ஆலை உள்ளது ஆனால், இதர விவசாயிகளைப் பராமரிக்க என்ன வழி? இதற்காக, வர்ணா நகரமைப்பில் இரண்டு பெரும் கோழிப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன தவிர, 250 லட்ச ரூபாய் செலவில் பாற்பண்ணையொன்றும் நிறுவப்பட்டுளளது சுற்றுப்புறத்தில் உள்ள 176 கிராமங்களிலிருந்து பால் சேகரிக்கப்பட்டு, இந்தப் பண்ணையில் பதப்படுத்தப்படுகிறது. நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது. கடன் மற்றும் கால்நடை மருத்துவ வசதிகள் விவசாயிகளுக்குக் கூட்டுறவு மூலம் எளிதாக்கப்பட்டுள்ளது. இந்த பண்ணையானது பால் பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது

நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலை வர்ணா நகரில் நவீன மயமாக்கப்பட்ட நிலையில் காட்சி தருகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை நியாயமானமுறையில் இப் பண்டசாலை வழங்குகிறது,

மாவீரன் சிவாஜி தோன்றிய அந்த மராட்டிய மண் என்றும் எதிலும் வீழ்ச்சி கண்டதில்லை அந்த மண்ணில் உதித்த பல கூட்டுறவுகளும் அவ்வாறே. இவற்றிற்கெல்லாம் பெருமை தேடித் தரும் வகையில் அமைந்துள்ளது வர்ணா நகர் கூட்டுறவுகள். மராட்டிய மண்டலத்துக்குப் [illegible]ருளகு மைகள் உண்டு [illegible] அத்தில்! அதில், கூ[illegible]ததுப் படைப்பான வர்[illegible]நகரின் வளர்ச்சி [illegible]ன்றும் இடம் பெறுகிற[illegible] (ன்பதைவிட கூட்டுறவு[illegible]த்துயக்கத்தில் வர்ணா நக[illegible] வரலாறு படைக்கிறது. என்பதே பொருத்தமாகும்!

நன்றி: கூட்டுறவு (முற்றும்)

# கூட்டுற

1977 ஆகஸ்ட் மாதமளவில் சுமார் 60 சத வீதமான ப.நோ.கூ. சங்க உறுப்பினர்கள் தங்களது கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டு நடத்துவதில் அக்கறையிழந்திருந்தனர். இச்சங்கங்களின் உறுப்பினர்களது கருத்துக்களைச் செவிமடுப்பதில் சங்க நிருவாகிகள் காட்டிய அசிரத்தையே இதற்கு முக்கிய காரணமெனக் கூறப்படுகின்றது. நுகர்வாளருக்குச் சேவைகளை வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களின் திறமையின்மைக்கு இதுவே பிரதான காரணமென்பதை சமீபத்தில் மக்கள் வங்கியால் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு புலப்படுத்துகின்றது. மொத்தம் 1187 உறுப்பினர்களைப் பேட்டி கண்டதில் 705 பேர் சங்க நிருவாகம் குறித்த தம் கருத்துக்கள் நிருவாகிகளால் புறக்கணிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். கூட்டுறவுச் சங்க இயக்குனர்களும், நிருவாகிகளும் உறுப்பினர்களின் கருத்துக்களுக்குச் செவிமடுப்பதில்லையென்றும், முறைப்பாடுகளை எடுத்துரைக்க அவகாசமளிப்பதில்லையென்றும் பல கூறி நின்றனர். துஷ்பிரயோகங்களையும், மோசடிகளையும் தவிர்ப்பதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பதில்லையென சுமார் மூன்றிலொரு பங்கு உறுப்பினர்கள் தெரிவித்தனர். சங்கங்களில் தங்களது குரலுக்குச் சிறிதும் மதிப்பளிக்கப்படுவதில்லை என்ற நிலையில் இத்தகைய ஒரு சூழ்நிலை நிலவியது ஆச்சரியமன்று. எந்த ஒரு கூட்டுறவு இயக்கமும் அதன் உறுப்பினர்கள் உற்சாகம் காட்டாத பட்சத்தில் வீழ்ச்சி காண்பது தவிர்க்க முடியாததாகும். இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தினது கூட்டுறவு உணர்வின் அழிவுக்கு வழிகோலிய முக்கிய காரணி பணித்துறையாட்சியின் கெடுபிடிகளாகும். வெளியார் தலையீடுகள், செல்வாக்குகள் என்பவற்றையிட்டும் பெருந்தொகையான உறுப்பினர்கள் முறையிடுகின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் திறமை இழப்புக்கு பெரும்பாலும் அரசியல் வாதிகளது தலையீடும் காரணமெனக் கூறப்படுகின்றது.

கூட்டுறவின் அடிப்படைக்கோட்பாடுகள் இலங்கையில் கூட்டுறவுத் தாபனத்தின் செயற்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் எவ்வளவு தூரம் தடையாக அமைந்துள்ளன என்பதற்கு நம் நாட்டின் கூட்டுறவு இயக்க வரலாறு சான்று பகர்கின்றது. எம்முடையதைப் போன்ற வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரச் சூழ்நிலைகள் நிலவும் நாடுகளில், பழமைபேண் அடிப்படைகளுக்கு விசுவாசமான முறையில் கூட்டுறவு இயக்கத்தை அறிமுகம் செய்யும் முயற்சி, பெரும்பாலும் அதிகார வர்க்கக் குழுக்களிடையே தாபிக்கப்பட்ட பாரம்பரியத் தலைவர்களின் அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றை மேலும் பலப்படுத்துவதிலேயே முடிவடைகின்றது. சில சந்தர்ப்பங்களில் பாரம்பரிய தோழமைப் பண்பைப் பலவீனப்படுத்துவதற்கும், சமூகத்தின் பலவீனக் குழுக்களிடையே தோழமை உணர்வை அதிகரிப்பதற்கும் இது உதவியுள்ளது.

கூட்டுறவு இயக்கத்தைத் தனியார் முதலாளித்துவத்தில் அல்லது அரச முதலாளித்துவத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அம்சங்கள் தனிநபர்கள் தாமாகவே ஒருங்கிணைதல், ஜனநாயக முகாமை, மூலதனத்தின் மீது நியாயமான இலாபம் பெறல், உறுப்பினர்களின் உழைப்பு, பங்கெடுப்பு என்பவற்றின் விகிதாசாரத்திற்கேற்ப இலாபப் பகிர்வு என்பனவாகும். அரசியல் மற்றும் சமூக மட்டங்களில் நடுநிலைமையைப் பேணுவதோடு தனது உறுப்பினர்களுக்கு அறிவு புகட்டுவதன் காரணமாகவும் ஏனைய இரு அமைப்புக்களை விடவும் கூட்டுறவு முறை வேறுபடுகின்றது. இந்த அடிப்படைகள் கூட்டுறவு முறைக்கு ஒரு தனியான இலட்சியப்பாட்டினைக் கொடுக்கின்றதெனினும். அவை பல சந்தர்ப்பங்களில் குறிப்பாக வளர்முக உலகில் முன்னேற்றத்திற்கான தடையாக அமைந்துள்ளன. இதற்கான பிரதான காரணம் வளர்ச்சியுறும் கிராமியப் பிரதேசங்கள் மிகக் குறைந்தளவே பணப்புழக்கத்தைக் கொண்டிருப்பதாகும். மேலும், வேதன தொழில் முறைமிகக் குறைவாகவே பரவியுள்ளது. இதன்விளைவாக மூலவளங்களையும் வர்த்தகத்தையும் நாணயப் பரிவர்த்தனையில் ஒன்றுக்கல் சடினமாகின்றது. எழுத்தறிவின்மை அறியாமை கலந்தும், வர்க்க, சாதி அடிப்படையில் திருப்தியுறல் போன்ற சமுதாய அமைப்புக்கள் கூட்டுறவுச் சங்கங்களை சுயமாகவும் ஜனநாயக அடிப்படையிலும் தாபிப்பதை கடினமாக்குகின்றன கூட்றவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் தாமாகவே இணைந்துகொள்ளல் கூட்டுறவுத் தன்மையைப் பாதுகாப்பதற்குப் பதிலாக பாதிப்புறச் செய்துள்ளது. பகிரங்க உறுப்புரிமை மூலம் சங்கங்களின் பொருளியல் செயற்பாட்டைப் பரவலாக்குகின்ற அதே வேளை, சுயநல நோக்குடையோருக்கு அது வழிதிறந்துவிடுவதன் காரணமாக பலவீனமான ஓர் அமைப்பாக மாறிவிடுகின்றது.

வளர்முக நாடுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்ட முகாமைக் குழு ஒன்றினுல் நிருவகிக்கப்படுகின்ற போதிலும், இப்பசவிகளையடைவதற்கான போராட்டத்தில் கோஷ்டி நலன் பேணும் சக்திகள் உறுப்பினர்கள் மத்தியில் ஒரு முக்கிய அம்சமாக இடம்பெறுகின்றது. அத்தகைய சக்திகள் அன்றாட நிருவாக விடயங்களிலும் தலையீடு செய்து பெருந்தொகையான உறுப்பினர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் திறமை இழப்பதற்கான ஒரு பிரதான காரணம் இதுவாகும். குறிப்பாக மிக அண்மைக்காலங்களில் அரசியல்வாதிகள் தமது செல்வாக்கையும் அதிகாரத்தையும் அதிகரித்துக்கொள்வதற்காக உள்ளூர் கூட்டுறவு இயக்கங்களில் தலையீடுசெய்து இறுதியில் சங்கங்கள் மீதான பூரண சட்டுப்பாட்டைத் தமது அதிகாரத்தின் கீழ்கொண்டுவர முயற்சித்தனர். இதன் விளைவாக அரசியல் சார்பற்ற கூட்டுறவாளர்கள் மத்தியில் கூட்டுறவு பற்றிய அக்கறையின்மை பரவி, அவர்கள் உற்சாகமிழந்தவர்களாகக் காணப்பட்டனர். இறுதியில் கூட்டுறவு இயக்கத்தில் சுயமாக இணைந்து பங்குபற்றும் ஆர்வம் சிதைக்கப்பட்டு கூட்டுறவு உணர்வே அழித்தொழிக்கப்பட்டாகிவிட்டது.

கூட்டுறவு உணர்வு
ரூல் என்ன? கூட்டுற
அடிப்படைக் கோட்
கள் யாவை? போன்ற
னேரன்ன வினுக்க
விடைதேடும் பொரு
நம் நாட்டில் கூட்டு
இயக்கம் வேரூன்றிய
னணியையும், கடந்த
வருட காலமாக
கடந்து வந்த வரலா
பாதையையும் திரு
பார்த்தல் அவசிய
தாயிருக்கும்.

## கூட்டுறவு இயக்கத்
## வேர்கள்

வரலாற்றின் ஆ
நாட்களிலிருந்தே மா
இனம் கூட்டுறவு இ
பைச் கடைப்பிடித்து
துள்ளது. வரலாற்று
முற்பட்ட கால த்தி
கூட ட்டையா
னம் நடத்திய மனித
ங்கள், அனைவரும்
டாக யங்கும்
இலகுவால் தம்
வசப்படுத்திக்கொ
லாம் என்பதை உண
ருந்தன. இதனையடு
வந்த நாடோடி ம
வளர்ப்புக் கூட்ட
ரும், பயிரிடுவோரும்
டுறவு அமைப்பைப்
லாயினர். நம் நாட்

# சோவியத் நாட்டின் திட்டமிட் பொருளாதார

இ. சுப்பிரமணியம்
செயலாளர்,
ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை, யாழ்ப்பாணம்.

நிலப்பரப்பைப் பொறுத்தமட்டில் உலகில் மிகப் பெரியநாடு சோவியத் யூனியனாகும். உலகின் மொத்த நிலப்பரப்பில் 1/6 பங்கு நிலத்தை சோவியத் யூனியன் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இந்நாட்டின் விஸ்தீரணம் 86 இலட்சம் சதுர மைலாகும். ஆசியா, ஐரோப்பா ஆகிய இரு கண்டங்களிலும் சோவியத்நாடு பரந்து பட்டுக் கிடக்கின்றது. இது மிகப் பெரிய நாடாகையால் இதன் பல்வேறு பகுதிகளிலும் பலவகைப்பட்ட தட்ப வெட்ப நிலைகள் காணப்படுகின்றன. சோவியத் நாடு பெரிய நாடாக விளங்கினுலும் மட்டான சனத்தொகையுடைய நாடாக விளங்குகின்றது. இந்நாட்டின் மொத்தச் சனத்தொகை சுமார் [illegible]1 கோடியே 50 இலட்சமாகும்.

20-ம் நூற்றுண்டின் ஆரம்பம் வரை சோவியத்நாடு மிகவும் பின்தங்கிய நாடாகவே விளங்கியது. 20-ம் நூற்றுண்டு வரை மூன்று நூற்றுண்டுகளுக்கு மேலாக ஜார் மன்னர்களின் கொடுங்கோலாட்சிக்குட்பட்டிருந்த இந்நாடு எவ்வித பொருளாதார முன்னேற்றமும் அடைய முடியாமலிருந்தது. ஜார் மன்னர் தமது ஆட்சிக் காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அம்சங்கள் யாவும் சீர்குன்றிய நிலையிலேயே காணப்பட்டன. போக்குவரத்து வசதிகள் எதுவுமின்றி நாட்டு மக்கள் அனைவரும் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தனர். நாடு முழுவதும் பஞ்சமும், பட்டினியும் தலைவிரித்தாடின. நாடு முழுவதையும் ஏழ்மையின் கொடிய கரங்களே கோலோச்சிக்கொண்டிருந்தன. நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 90 வீதத்திற்கு மேற்பட்ட குடியானவர்களும், தொழிலாளர்களும் வறுமையின் கொடிய கரங்களுக்குள் சிக்குண்டு மரணப் போராட்டம் நடாத்திக் கொண்டிருந்தனர். 1917ம் ஆண்டு சோவியத் நாட்டில் முதலாவது பொதுவுடமை அரசு நிறுவப்படும் வரை இத்தகைய நிலையே காணப்பட்டது.

சோவியத் மக்கள் வறுமைப்பிணியுடன் போராடிக்கொண்டிருந்த ஜார் மன்னருடைய ஆட்சிக்காலத்திலதான் கூட்டுறவுக் கொள்கைகளும், கூட்டுறவு அம்சங்களும் நாடடில் பரவத் தொடங்கின. இங்கிலாந்து, ஜெர்மனி, சுவீடன், டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாடுகளைப் போலவே சோவியத் நாடும் கூட்டுறவுத் துறையில் பூரண வளர்ச்சியடைந்த நாடாக விளங்குகின்றது, சோவியத் நாட்டின் பொருளாதார, சமூக கலாசார மேம்பாட்டிற்கு கூட்டுறவியக்கம் கணிசமான அளவு தொண்டினை ஆற்றியிருக்கின்றது. முதலாளித்துவச் சுரண்டலையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் முற்றாக ஒழித்து சமூக உடமைப் பொருளாதார அமைப்பைக் கட்டி எழுப்பும் பணியில் சோவியத் அரசுக்கு அச்சாணியாக விளங்கியது கூட்டுறவியக்கமேயாகும்.

19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேதான் நாட்டில் கூட்டுறவியக்கம் ஆரம்பிக்கப்பட்டது 1864-ம் ஆண்டுதான் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவும் முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கிலாந்தில் ரொச்டேல் முன்னேடிகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி வெற்றி பெற்ற மாபெரும் சாதனையினுலும் ஜெர்மனியில் சூள்ஸ்டெலிச்ஸ் றபேசன் போன்றேர் கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவிப் பெற்ற மாபெரும் சாதனையினுலும் தூண்டப்பட்ட சோவியத் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவத் தொடங்கினர். 1864-ம் ஆண்டு கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களும் 1865-ம்ஆண்டு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் முதன் முதலாக சோவியத் நாட்டில் நிறுவப்பட்டன.

சோவியத் நாட்டில் ஜார் மன்னரின் ஆட்சிக்காலத்திலே கூட்டுறவுச் சஙகங்கள் உருவாக்கப்பட்டபோதிலும் அவை அக்காலத்தில் பூரண வளர்ச்சியடையவில்லை. ஜார் மன்னரின் சர்வாதிகார அரசு கூட்டுறவியக்கம் வளர்ச்சியடைவதை விரும்பவில்லை கூட்டுறவியக்க வளர்ச்சி ஜனநாயக பாரம்பரியங்களையும் தன்னுட்சிக்கொள்கைகளையும் சமூகத்தில் வேரூன்றச் செய்வதன் மூலம் தமது சர்வாதிகார முடியாட்சிக்குச் சாவுமணி அடிக்குமெனக் கருதியமையால் ஜார் மன்னர் கூட்டுறவியக்க வளர்ச்சியை விரும்பவில்லை. ஆதலால் முடியாட்சி அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு எதுவித ஆதரவும் ஊக்கமும் அளிக்கவில்லை. இதனுல் சோவியத் நாட்டில் கூட்டுறவு இயக்கம் 1905ம் ஆண்டு வரை பூரண வளர்ச்சியடையவில்லை எனினும் இயக்கத்தின் துரித வளர்ச்சிக்கான வித்துக்கள் ஆங்காங்கு இடப்பட்டிருந்தன. ஜார்மன்னருடைய கொடுங்கோலாட்சியின் போது பெரிய முதலாளித்துவ முதலைகளின் சுரண்டலிலிருந்து ஏழைகளையும், விவசாயிகளையும், தொழிலாளர்களையும் ஓரளவுக்காவது பாதுகாத்த பெருமை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குமே உரியதாகும். இக்காலப்பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய புனித சேவைகள் கூட்டுறவியக்கத்தை மக்கள் மனதில் பதிய வைத்தன. 1905ம் ஆண்டு சோவியத் நாட்டுக்கும் யப்பானுக்குமிடையே நடைபெற்ற யுத்தம் கூட்டுறவியக்கத்தின் மகிமையை மேலும் பன்மடங்காக அதிகரித்தது. இப்போர் நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார அமைப்பை வலுவாகப் பாதித்தபோதிலும் கூட்டுறவுச் சங்கங்களின் மகிமையையும் அவசியத்தையும் துலாம்பரமாக வெளிப்படுத்தியது போர்க்காலத்தில் தட்டுப்பாடான நிலையில் இருந்த உணவுப் பொருட்களை சகலமக்க

ளுக்கும் பங்கிட்
கொடுப்பதில் களங்க
சேவையை கூட்டு
சங்கங்கள் நல்இ
மூலம் ட்டின்
ளாதா அமைப்
கேந்திர நிலையை
றுக்கொண்டன. இ
கைச் சூழ்நிலைகளினுல்
டுறவியக்கம் நாளெ
வண்ணமும் பொழுதெ
மேனியுமாக வ

தொடங்கியது! 19
ஆண்டு சோவியத்
டில் 54500 கூட்டு
சங்கங்கள் காண
டன அவற்றின் வி
வருமாறு:

(1) நுகர்வோர் கூட்
டுறவுச் சங்கங்கள் 2
(2) கூட்டுறவுக்
கடன் சங்
கங்கள் 1
(3) கூட்டுறவு விவ
சாய சங்கங்கள்
(4) உற்பத்தியாளர்
கூ. சங்கங்கள்
(5) ஏனைய கூ. சங்
கங்கள்

5

1917ம் ஆண்டு
நாட்டில் ஏற்பட்ட பு
யின் பின்னர் கூட்டு
வியக்கம் பூரணவள
பெற்று பொலிவுடன்

# டுறவு

ட்டுறவு உணர்வு என் என்ன? கூட்டுறவின் ப்படைக் கோட்பாடு பாவை? போன்ற பல ன்ன வினாக்களுக்கு தேடும் பொருட்டு நாட்டில் கூட்டுறவு கம் வேரூன்றிய பின் லையும், கடந்த 60 ட காலமாக அது து வந்த வரலாற்றுப் தையையும் திரும்பிப் த்தல் அவசியமான ருக்கும்.

### றவு இயக்கத்தின் கள்

வரலாற்றின் ஆரம்ப களிலிருந்தே மானுட ம் கூட்டுறவு இயல் கடைப்பிடித்து வந் ளது. வரலாற்றுக்கு பட்ட காலத்திலும் வேட்டையாடிச் செ நடத்திய மனித இன , அனைவரும் கூட் யங்கும் ாது யல் தம் இரையை படுத்திக்கொள்ள என்பதை உணர்ந்தி தன. இதனையடுத்து நாடோடி மந்தை ப்புக் கூட்டத்தின பயிரிடுவோரும் கூட் அமைப்பைப் பேண னர். நம் நாட்டின் விவசாய வாழ்க்கையும், சமூக, சமயச் சடங்குகளும் இன்றும் கூடக் கூட்டுறவு அடிப்படையிலேயே நடைபெற்று வருகின்றன.

நெல் விவசாயத்தில் பின்பற்றப்படும் ''அத்தம்'' முறையின்கீழ் நாற்று நடுதல், உழவு, அறுவடை, சூடடித்தல் போன்ற வேலைகளில கமக்காரர்கள் பரஸ்பரம் உதவிக்கொள்கின்றனர். நீண்ட நெடுங்காலமாக இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது தட்டுமாறு. கடடிமாறு எனப்படும் சுழற்சிப் பயிர்ச்செய்கையிலும் கூட கூட்டுறவுத்தத்துவம் பேணப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். ஒரே குளத்திலிருந்து நீரைப்பெறும் கிராமங்களில் நீர் முகாமை பெருமளவில் கூட்டுறவை நாடி நிற்கிறது.

பிங்கம, தொவில், பலி, கம்மடு போன்ற சமயாசாரச் சடங்குகளில் மட்டுமன்றி, சிவனொளிபாத மலை யாத்திரையிலும் கூட கூட்டுறவு அடிப்படையில் மக்கள் செயற்பட்டு வருவதானது நம் நாட்டுக் கிராமிய வாழ்க்கையின் ஒரு சிறப்பம்சமாகும்; மேலும் அங்கேலி, பொரபெலி போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களிலும், திருமணம், மரணச்சடங்கு போன்ற கிரியைகளிலும் இன்றும் கூட கூட்டுறவுக் கோட்பாடு பேணப்பட்டு வருகின்றது. பரஸ்பர உதவி எதிர்பார்ப்பில் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தம் உழைப்பினை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கின்றனர்.

இத்தகைய கூட்டுறவு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பியல்பு யாதெனில், அவ்வக் கருமங்களில் நன்கு தேர்ச்சி பெற்றோர் குறித்த சந்தர்ப்பங்களில் தலைமையை ஏற்பதாகும். நிரந்தரமான சமூக உறவுகள், மானிய அமைப்பிலும், அதனையடியொற்றிய குல முறையிலும் தங்கியிருந்த போதிலும், மேற் கூறிய சந்தர்ப்பங்களில் தொழில் முறையில் தேர்ச்சி பெற்றோரே தலைமையை ஏற்கின்றனர்.

சுய விருப்பிலும், சம்பிரதாய பூர்வமற்ற கூட்டுறவு அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இதே கருமங்களை, சம்பிரதாயமான ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமோ, அல்லது பயிர்ச் செய்கைக் குழுவின் மூலமோ நிறைவேற்றிவைக்க முயலும் போது உறுப்பினர்களின் பூரணமான பங்கெடுப்பினையோ, திறமையான இயக்கத்தினையோ பெற்றுக்கொள்ள முடியாதிருப்பது தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. மேலும், கிராமிய ரீதியில் இயங்கி வரும் பரஸ்பர உதவிச்சங்கங்களை சட்டரீதியாகப் பதிவு செய்த சந்தர்ப்பங்களிலும் இதே நிலைமை எழுந்துள்ளது.

மேலும், நீர்ப்பாசனத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பெரிய குடியேற்றங்களிலும் இக்கூட்டுறவு அம்சம் அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக நீர் முகாமை போன்றவற்றில் குடியேற்ற வாசிகளின் அணுகுமுறை கவலையளிப்பதாக இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களும் இச்சமூகங்களில் வெற்றியடையவில்லை

காலங்காலமாக திறமையின் அடிப்படையில் தம் தலைவரைத் தெரிவு செய்து வந்த சமூகங்கள், சட்டரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமனம் பெற்ற ஒரு தலைவரின் வழிநடாத்துதலை அங்கீகரிக்க விரும்பாதிருத்தல் இத்தகு தோல்விக்கான ஒரு காரணமாக இருக்கலாம்.

மேலைத்தேச குடியேற்ற ஆதிக்கங்கள் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முற்பட்ட காலங்களில், இந்நாட்டின் பல சமூக, பொருளாதார நிறுவனங்கள் பரஸ்பர உதவியிலும், சுய தங்கியிருத்தலிலுமே இயங்கி வந்தன போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் பிரித்தானியர் ஆகியோரின் ஆட்சியின் விளைவாக சுயதேவைப் பூர்த்தி, அமைப்பில் தங்கியிருந்த நம் நாட்டின் பொருளாதாரம், பணப் பொருளாதாரமாக பெருமாற்றம் கண்டது. மேலும், இம்மாறுதல்களின் விளைவாக பாரம்பரிய சமூகம் புதிய பெறுமானங்களை ஈர்த்துக் கொள்ளத் தொடங்கிற்று. எனவே அந்நிய ஆதிக்கம் நிலவிய காலப் பிரிவில், நம் நாட்டுக் கிராமப் பொருளாதாரத்தைப் பன்னெடுங்காலமாகத் தாங்கி வந்த சமூக நிறுவனங்களும், விழுமியங்களும் சீர்குலைவுற்று வீழ்ச்சியடைந்தன.

இவ்வாறானதொரு பொருளாதார, சமூகப் பின்னணியிலேயே இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானியர் இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை அறிமுகப்படுத்தினர். கூட்டுறவுத் தத்துவத்தின் உன்னதமான குறிக்கோளைச் சாசுவதமாக்கி. பரஸ்பர உதவி, சுய தங்கியிருத்தல போன்ற இலட்சியங்களில் கட்டியெழுப்பப்பட்டிருந்த நம் நாட்டின் நீண்ட நெடுங்காலச் சமூக நிறுவனங்கள் குறித்து எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை. கிராமிய விவசாயிகளின் கஷ்டங்களைத் தீர்த்துவிடும் நம்பிக்கையுடன் ஜேர்மன் மாதிரியிலான கூட்டுறவுச் சங்கங்களைப் பிரித்தானியர் ஆரம்பித்தனர்.

''கூட்டுறவு'' என்ற பதத்தின் வெளிப்படையான பொருள் ஒன்று சேர்ந்து உழைத்தல் என்பதாகும்; ஆயினும், கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அது சற்று மாறுபட்ட விதத்திலேயே பிரயோகிக்கப்படுகின்றது சில அடிப்படை நோக்கங்களை வைத்துக் கொண்டு குறிப்பிட்ட சில இலட்சியங்கள் மூலம் அவற்றை எய்த முயற்சி செய்யும் ஒரு குழுவினையே தற்போதைய பதபிரயோகம் குறிக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்களும், கோட்பாடுகளும், இலட்சியங்களும் காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ற வகையில் வேறுபட்டுச் சென்றுள்ளன. எவ்வாறிருப்பினும், ஒருங்கமைக்கப்பெற்ற கூட்டுறவு இயக்கத்தின் உலகளாவிய வளர்ச்சியின் வரலாற்றை நோக்குமிடத்து, பல வகைப்பட்ட வித்தியாசங்களுக்கு மத்தியிலும் ஒரு பொது மாதிரி உருவாகி வந்துள்ளதை காணமுடிகின்றது. உலக சமூக, பொருளாதார ஒழுங்குகளில் பிரதான மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் நவீன கூட்டுறவு

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

# ிட்ட ...தார வளர்ச்சியில் கூட்டுறவுப் பண்ணைகளின் பங்த

ரும் பங்கிட்டுக் டுப்பதில் களங்கமற்ற வையை கூட்டுறவுச் ங்கள் நல்கியதன் ம் நாட்டின் பொரு அமைப்பில் ஒரு நிலையை பெற் காண்டன. இவ்வ சூழ்நிலைகளினால் கூட் யக்கம் நாளொரு ணமும் பொழுதொரு னியுமாக வளரத் டங்கியது. 1917 ம் டு சோவியத் நாட் 54500 கூட்டுறவுச் ங்கள் காணப்பட் அவற்றின் விபரம் மாறு:

| | |
|---|---|
| நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 25000 |
| கூட்டுறவுக் ன் ங்கங்கள் | 16500 |
| கூட்டுறவு விவ ய சங்கங்கள் | 8000 |
| உற்பத்தியாளர் சங்கங்கள் | 4500 |
| ஏனைய கூ. சங்கங்கள் | 500 |
| | 54500 |

1917ம் ஆண்டு இந் டில் ஏற்பட்ட புரட்சி பின்னர் கூட்டுற க்கம் பூரணவளர்ச்சி ற்று பொலிவுடன் திகழத் தொடங்கியது. புரட்சியின் பின் ஆட்சியைக் கைப்பற்றிய முதலாவது பொதுவுடமை அரசு நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்குப் பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கியது. இந்த அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்தவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக்களைந்து சமத்துவமும் செல்வச்செழிப்பும் மிக்க சமூக உடமைச்சமுதாயத்தை உருவாக்கவும் கூட்டுறவியக்கமே சிறந்த கருவியென்பதைப் பொதுவுடமை அரசு நன்குணர்ந்தது

இப் பெரும்பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு அரசு கூட்டுறவியக்கத்தை விருத்தி செய்வதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியது. புரட்சித்தலைவனாகிய லெனின் கூட்டுறவியக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இயக்கத்தை ஊக்குவிக்கத் தொடங்கினார். ஒரு பூரணத்துவம் வாய்ந்த சமூக உடமைச் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு கூட்டுறவியக்கமே சிறந்த கருவியென்று லெனின் போதித்தார் நாட்டுமக்கள் அனைவரும் கூட்டுறவியக்கத்தில் ஈடுபடுவதன் மூலம் பொருளாதார விடுதலையை இலகுவில் அடைய முடியுமென்று சகலருக்கும் எடுத்து விளக்கினார். லெனினைத் தொடர்ந்துவந்த சோவியத் தலைவர்கள் அனைவரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் கூட்டுறவியக்கத்திற்கு முதலிடம் கொடுத்தனர். சோவியத் அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லையற்ற சலுகைகளை வழங்கியது. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருந்தொகையான கடனும் மானியமும் வழங்கப்பட்டது. அரசின் உற்பத்திப் பொருட்களையும், பங்கீட்டுப் பொருட்களையும் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் ஏகமுகவர்களாக நியமிக்கப்பட்டன; அரசின் கட்டாயத்தின் பேரில் நாட்டிலுள்ள வயது வந்த அனைவரும் தம்மை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்டனர் சுருங்கச் சொன்னால் 1917 ம் ஆண்டுக்குப் பின்னர் சோவியத் கூட்டுறவியக்கம் அரசின் செல்லப் பிள்ளையாக வளரத் தொடங்கியது.

சோவியத்நாடு ஒரு விவசாய நாடாகும் 1917 ம் ஆண்டுப் புரட்சியின் பின் இந்நாடு பெருமளவில் தொழில்வளம் பெற்றாலும் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 66% மக்கள் நாட்டின கிராமப்புறங்களில் விவசாயம் செய்தே வாழ்ந்து வருகின்றனர். 350 ஆண்டுகளாக நாட்டை ஆட்சிபுரிந்த ஜார் மன்னர்கள் நாட்டின் விவசாய விருத்திக்கு எதுவித ஆக்கவேலைகளையும் மேற்கொள்ளவில்லை நாட்டில் பெருந்தொகையான நிலம் பயன்படுத்தப்படாமல் கிடந்தது. விவசாயிகள் எவ்வித பாதுகாப்புமின்றி நிலச்சுவாந்தர்களின் கொடுமைக்குள் சிக்குண்டிருந்தனர். நாட்டின் மொத்த விளைநிலத்தில் ⅔ பங்கு நிலச்சுவாந்தர்களின் சொத்துடமையாகக் காணப்பட்டது. சொத்துடமை அம்சங்களும் தனியுடமை அம்சங்களும் நாட்டில் மேலோங்கியிருந்தன.

குடியானவர்கள் மிகக் கொடிய குத்தகைத் திட்டத்தின்கீழ் நிலக்கிழார்களிடம் விளைநிலத்தைக் குத்தகைக்குப் பெற்று விவசாயம் செய்துவந்தனர் விவசாயிகளின் உழைப்பில் பெரும்பகுதியை நிலக்கிழார்கள் உறிஞ்சிக் கொண்டிருந்தனர்.

மேற்படி பிரச்சினைகள் ஒருபுறமிருக்க விவசாயிகள் தமது விவசாயத்தை விருத்தி செய்வதற்குக் கடன் வசதிகளோ உபகரண வசதிகளோ செய்து கொடுக்கப்படவில்லை விவசாயிகள் தமக்குவேண்டிய முதலை நிலக்கிழார்களிடம் கொடிய வட்டிக்குப் பெற்றே விவசாயம் செய்துவந்தனர் விவசாயிகளுடைய விவசாய நிலை மட்டுமன்றி அவர்களுடைய வாழ்க்கை நிலையும் சீர்குன்றியிருந்தது. விவசாயம் சிறந்த முறையில் நடைபெறாமையால் நாட்டின் விவசாய உற்பத்தியும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

சோவியத் நாட்டின் பொருளாதார அமைப்பும், விவசாய அமைப்பும் சீர்குன்றிச் சின்னாபின்னப்பட்டுக் கிடந்த சூழ்நிலையில் சோவியத் விவசாயிகளின் பொருளாதாரப் பிணியை அகற்றும் விடிவெள்ளியாகவே கூட்டுப் பண்ணை தோன்றியது. சோவியத் நாட்டில் கூட்டுப் பண்ணைமுறை பொதுவுடமைக் கட்சியின் கொள்கையின் அடிப்படையில் தோன்றவில்லை சோவியத் நாட்டின் சீர்குன்றியிருந்த விவசாய அமைப்பைச் சீர் செய்வதற்கும் நிலக்கிழார்களின் கெடுபிடியிலிருந்து விவசாயிகளுக்கு பொருளாதார விடுதலை பெற்றுக் கொடுக்கவும் கூட்டுப் பண்ணைமுறை தவிர்க்க முடியாததொன்றாகக் காணப்பட்டது. இதேகருத்தைத்தான் டாக்டர் பே (Dr. Pay) என்ற கூட்டுறவுப் பேரறிஞரும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

சோவியத் நாட்டில் கூட்டுறவுப்பண்ணை விவசாயம் தோன்றிய பின்பே சோவியத் நாட்டின் விவசாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. நாட்டை எதிர்நோக்கிய பொருளாதார சமூகப்பிரச்சினைகளை முற்றாக ஒழித்து பொருளாதாரச் செழிப்பை ஏற்படுத்தவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் சொத்துடமையையும் ஒழித்து சமத்துவம் நிறைந்த சோசலிச பொருளாதார அமைப்பை ஏற்படுத்தவும் கூட்டுப்பண்ணை முறையே அருமருந்தாக அமைந்தது. கிராமிய விவசாயிகளை எதிர்நோக்கிய பொருளாதாரப் பிரச்சினைகளை இலகுவில் தீர்க்கவும் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் கூட்டுப் பண்ணை முறையே மூல வித்தாக அமைந்தது. 19ம் நூற்றாண்டில் வறுமையிலும், பொருளாதாரப் பிரச்சினைகளிலும் முதலாளித்துவச் சுரண்டல்களிலும் சிக்குண்டு செயலிளந்திருந்த

(தொடர்ச்சி 6 ம் பக்க

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

# சோவியத் நாட்டின்.......

சோவியத்நாட்டை பொருளாதாரப் பலமும், செல்வச் செழிப்பும் மிக்க ஒரு பெரிய வல்லரசாக உருவாக்குவதற்கு கூட்டுப் பண்ணை முறையே வழி வகுத்தது. சோவியத் நாட்டில் இயங்கி வருகின்ற கூட்டுப் பண்ணைகளைப் போன்று பாரிய பண்ணைகள் வேறு எந்த நாட்டிலும் கிடையாது. கூட்டுப் பண்ணை முறைக்கு சோவியத்நாடு உலக நாடுகள் அனைத்துக்கும் எடுத்துக் காட்டாகவும், முன்னோடியாகவும் விளங்குகின்றது.

**கூட்டுப் பண்ணையின் முக்கிய அம்சங்கள்**

சோவியத் நாட்டில் இயங்கி வருகின்ற கூட்டுப் பண்ணைகள் கோல்கோசி (Kolkhozy) என அழைக்கப்படுகின்றன. இக்கூட்டுப் பண்ணைகள் மக்களால் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் அல்ல. அரசாங்கத்தினால் திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிறுவனங்களாகும். விவசாயத் துறையில் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதற்காகவும் விவசாயப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களே இக்கூட்டுப்பண்ணைகளாகும். பல நூற்றாண்டுகளாக தனி விவசாயம் செய்து வந்த மக்கள் ஆரம்பத்தில் கூட்டுப்பண்ணை விவசாயத்தை விரும்பவில்லை. ஆதலால் கூட்டுப் பண்ணை விவசாயம் அரசாங்கத்தினால் விவசாயிகள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. சோவியத் விவசாயிகள் அனைவரும் கூட்டுப் பண்ணை விவசாயத்தில் ஈடுபாடு கொள்ளுமாறு அரசினால் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். கூட்டுப் பண்ணை முறையை அனைவரையும் ஏற்கச் செய்வதற்கு அரசு கடும் அடக்கு முறைச் சட்டங்களைக்கூடக் கடைப்பிடித்தது. கூட்டுப் பண்ணை முறையை ஏற்க மறுத்த பலர் சிறையிலே தள்ளப்பட்டார்கள் புரட்சியின் பின்னர் நிறுவப்பட்ட பொதுவுடமை அரசாங்கம் நிலப்பிரபுக்களின் உடமையாக இருந்த பெருந்தொகையான நிலங்களை நட்ட ஈடு எதுவும் வழங்காமல் (Compensation) பறிமுதல் செய்து நாட்டு உடமையாக்கி விவசாயிகள் அனைவருக்கும் சமமாகப் பங்கிட்டது. பின்னர் இந்நிலங்கள் யாவும் கூட்டுப் பண்ணைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

கடும் நோயினால் பீடிக்கப்பட்டுத் துன்புறுகின்ற குழந்தைக்குத்தாயானவள் மருந்தைக் கட்டாயப்படுத்திப் பருக்குவது போன்று பொருளாதார நோயினால் பீடிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுப் பண்ணை விவசாயம் என்ற அருமருந்தை சோவியத் அரசு பலவந்தமாகப் புகுத்தியமை தவறில்லையென்றே பலரும் கருதுகின்றனர்.

புரட்சியின்பின் உருவாக்கப்பட்ட பொதுவுடமை அரசு பாரிய கைத்தொழில்களை விருத்தி செய்வதிலேயே அதிக அக்கறை செலுத்தியது. இரும்பு உருக்கு முதலான உலோகங்களைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய கனரகத் தொழில்களை விருத்தி செய்வதிலேயே அரசு அதிக அக்கறை கொண்டது. இத்துறைகளின் வளர்ச்சியில் அரசு அதிக அக்கறை செலுத்தியமையால் மக்களுக்குத் தேவையான நுகர்பொருட்களையும், விவசாயப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்குக் கூட்டுப் பண்ணைகள் பயன்படுத்தப்பட்டன.

சோவியத் நாட்டின் திட்டமிட்ட பொருளாதார அமைப்பில் கூட்டுப் பண்ணை விவசாயத்திற்கே இடம் வழங்கப்பட்டிருக்கின்றது. அரசின் திட்டமிட்ட விவசாயப் பணிகளை அமுல் நடத்துவதற்கு இக் கூட்டுப்பண்ணைகளே கருவியாகப் பயன்படுத்தப் படுகின்றன. விவசாயத் துறையில் திட்டப்படுகின்ற பாரிய திட்டங்கள் யாவற்றையும் இப்பண்ணைகளே அமுல் நடத்திவருகின்றன.

ஏனைய நாடுகளில் இயங்குகின்ற கூட்டுப் பண்ணைகளுக்கும், சோவியத் நாட்டில் இயங்குகின்ற கூட்டுப் பண்ணைகளுக்குமிடையே அதிக வேறுபாடுகள் உள. சோவியத் நாட்டின் விளை நிலங்கள் யாவும் அரசின் உடமையாக விளங்குகின்றன. தேசிய மயமாக்கப்பட்டுள்ள விளை நிலங்கள் யாவும் கூட்டுப் பண்ணைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளின் கூட்டு உழைப்பின் அடிப்படையில் இந்நிலங்களின் விளைவுகள் யாவும் நாட்டு மக்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

தனியுரிமைச் சொத்துடமை என்ற சொல்லுக்கு சோவியத் நாட்டில் இடம் கிடையாது. விளை நிலம், உற்பத்திச் சாதனங்கள் கால் நடைகள், விளைபொருட்கள் அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக விளங்குகின்றன. அரசின் இச்சொத்துக்களின் உரிமையை அனுபவிக்கும் சிறப்புரிமையை கூட்டுப்பண்ணைகள் பெற்றிருக்கின்றன.

சோவியத் நாட்டு விவசாயிகள் அனைவரும் தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்யாமல் ஒரு கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமது நிலம் அனைத்தையும் கூட்டுப் பண்ணைகளிடம் ஒப்படைத்து கூட்டுப்பண்ணைகளை நிறுவி கூட்டு அடிப்படையில் விவசாயம் செய்து வருகின்றனர். இப்பண்ணைகளில் கோதுமை, பார்லி, ஓட்ஸ், பருத்தி, சோளம், மரக்கறிவகை போன்றவை பெருந்தொகையாகப் பயிரிடப்படுகின்றன.

கூட்டுப்பண்ணைகளில் விவசாயமே முக்கிய தொழிலாக இருந்த போதிலும் நவீன முறையில் உருவாக்கப்பட்ட கால்நடைப்பண்ணைகளும் பாற்பண்ணைகளும், கோழிப்பண்ணைகளும் நடாத்தப்படுகின்றன. கால்நடைப் பண்ணைகளில் வெள்ளைப்பன்றி கறுப்புப் பன்றி, ஆடு, மாடு போன்ற கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் மூலம் பெருந்தொகையான இறைச்சியும் முட்டையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1952 ம் ஆண்டு சராசரியாகஒரு பண்ணையில்வளர்க்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 313 ஆகும். 1967 ம் ஆண்டு ஒரு பண்ணையில் சராசரி கால்நடைகளின் எண்ணிக்கை 1092 ஆகும். இன்று கால்நடைகளின் சராசரி எண்ணிக்கை பண்ணை ஒன்றுக்கு சுமார் 2500 ஆகும்.

சோவியத்நாட்டில் கூட்டுப் பண்ணைகள் துரித வேகத்தில் வளர்ச்சியடைந்து செல்கின்றன. வளர்ச்சி வேகம் வருமாறு:

| ஆண்டு | பண்ணையின் தொகை |
| --- | --- |
| 1918 — | 350 |
| 1919 — | 6200 |
| 1910 — | 10500 |
| 1950 — | 25400 |
| 1973 — | 31600 |

973-ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி நாட்டில் 31600 கூட்டுப் பண்ணைகள் இயங்கி வருகின்றன். இப்பண்ணைகளில் கிட்டத்தட்ட 47 கோடியே 40 இலட்சம் ஏக்கர் நிலம் பயிரிடப்படுகின்றது. இப்பண்ணைகளில் 20 இலட்சம் உழவு யந்திரங்களும், 3 இலட்சம் அறுவடை யந்திரங்களும், 6 இலட்சம் மோட்டார் வாகனங்களும் இருக்கின்றன. சுமார் 2½ கோடி விவசாய குடும்பங்கள் கூட்டுப் பண்ணை விவசாயத்தில் ஈடுபாடு கொண்டிருக்கின்றன. நாட்டின் மொத்த விளைநிலத்தில் கிட்டத்தட்ட 94% விளைநிலம் கூட்டுப் பண்ணைகளின் ஆட்சியில் இருக்கின்றது.

பண்ணையில் சேர்ந்துள்ள எந்த உறுப்பினரும் நிலத்தைச் சொந்தமாகப் பெற முடியாது. நிலம் அனைத்தும் அரசினுடையது. பண்ணை உறுப்பினர்களுக்கு வேலை செய்யும் நாட்களின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் அவர்களுடைய வேலையின் தரத்தையும், வேலை அளவையும் பொறுத்து அமைவதால் உறுப்பினர் யாவரும் தமது முழு உழைப்பையும், திறமையையும் பண்ணையின் முன்னேற்றத்திற்கு நல்கக் கூடியதாக இருக்கின்றது. தனியார் விவசாயத்தின் மூலம் போதிய வருமானத்தைப் பெறமுடியாமல் திண்டாடிய விவசாயிகள் கூட்டுப் பண்ணை விவசாயம் தோன்றிய பின்னர் கணிசமான அளவு ஊதியத்தைப் பெற்றுக் கொண்டனர். கூட்டுப் பண்ணை உறுப்பினர்கள் தமக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தைக் கொண்டு தமது பொருளாதாரத் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்கின்றனர். விவசாயிகள் தமக்கெனச் சொந்த வீடுகளைக் கட்டிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கூட்டுப் பண்ணைகளில் வேலை செய்யாது வேறு தொழில்களை மேற்கொள்கின்றவர்களும் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். குடும்பத்தில் இருப்பவர்கள் அனைவரும் விவசாயத்தில் மட்டும் ஈடுபடுவதில்லை. வேறு தொழில்களிலும் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுப் பண்ணைகளுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் தாராளமாக வழங்கி வருகின்றது. கூட்டுப் பண்ணைகளுக்கு வேண்டிய நிதியை அரசு கடனாகவும், மானியமாகவும் வழங்கி வருகின்றது. விவசாயத்திற்குத் தேவையான விவசாய யந்திரங்களையும் விவசாய உபகரணங்களையும் அரசு வழங்கி வருகின்றது. விவசாயப் பண்ணைகட்குத் தேவையான விவசாய யந்திரங்களையும் கருவிகளையும் உற்பத்தி செய்யும் உற்பத்தி நிலையங்கள் பலவற்றை அரசு நடாத்தி வருகின்றது. 1978-ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி சுமார் 9000 யந்திர உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையங்கள் விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்வதிலும், திருத்துவதிலும் பண்ணைகளுக்குப் பெரிதும் உதவி புரிகின்றன. பண்ணைகளின் விவசாய முயற்சிகளில் கிட்டத்தட்ட 80 சதவீத முயற்சிகள் யந்திர மூலமே நடாத்தப்படுகின்றன. கூட்டுப்பண்ணைகள் தோன்றிய பின்னர் உற்பத்தி பன்மடங்காக அதிகரித்துள்ளது. 1913-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக்கொண்டு ஆராயின் உற்பத்தி மடங்குச் சுட்டெண் பின்வருமாறு அதிகரித்து வந்திருக்கின்றது.

| ஆண்டு | உற்பத்தி மடங்குச் சுட்டெண் |
| --- | --- |
| 1940 | 140 |
| 1960 | 224 |
| 1965 | 252 |
| 1967 | 276 |
| 1972 | 312 |

பொதுவுடமைத் தத்துவங்களும் சோசலிசப் பாரம்பரியங்களும் நன்கு வேரூன்றியிருக்கின்ற இந்நாட்டிலேகூட தனியுரிமை எண்ணங்களும் சொத்துரிமை விருப்பங்களும் அடியோடு மறையவில்லை என்பது பெரிய ஆச்சரியத்திற்குரிய விடயமாகும். பொதுவுடமை என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் ஏற்படவில்லை. தனக்கெனச் சொந்த நிலத்தைப்பெற முயல்வது மனிதப் பண்பு. இதற்கு சோவியத்நாடு விதிவிலக்கல்ல. ஒவ்வொரு விவசாயியும் குடியிருக்கும் வீட்டுக்கு அருகாமையில் ½ ஏக்கருக்கு மேற்படாத நிலம் அவ்விவசாயியின் குடும்பத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலம் இக்குடும்பத்தின் தனிச் சொத்தாகும். இதில் வேறு எவரும் உரிமை பாராட்ட முடியாது. இந்நிலத்தில் அக்குடும்பத்தினர் தமது விருப்பத்தின்படி விவசாயம் செய்து கொள்ளலாம். இந்நிலத்தில் அவர்கள் தமது பொறுப்பில் கால் நடைகளையும் வளர்த்து வருகின்றனர். விவசாயிகள் தமக்குச் சொந்தமான ½ ஏக்கரில் உற்பத்தி செய்கின்ற பொருட்களை தமது விருப்பப்படி விலைக்கட்டுப்பாடற்ற மாஸ்கோ சந்தையில் விற்று வருகின்றனர்.

சோவியத்நாட்டுக் கூட்டுப் பண்ணைகளின் நிருவாகம் சனநாயக முறைப்படி நடாத்தப்படுகின்றது. உறுப்பினர்கள் அடங்கிய பொதுச் சபைக்கே சகல அதிகாரங்களும் வழங்கப் பட்டிருக்கின்றன.

(வளரும்)

சிறந்த தரமுள்ள பொருட்களைப்பெற
கூட்டுறவின் ஆக்கப்பணிக்கு உதவுங்கள்.
குறைந்த விலையில் நிறைந்த பயன்தரும்

பண்கோப் சேட்வகைகள்
பண்கோப் காற்சட்டைகள்
பண்கோப் நைலெக்ஸ் சேலைகள்,
சூட்டிங் வகைகள்.
நல்லெண்ணெய்
நீல சவர்க்காரம்
கைத்தறிப் புடவைகள்
பாண், பிஸ்கட், கேக் வகைகள்

ஆகியவற்றை

பண்டத்தரிப்புப் பரிஷ்
ப.நோ.கூ.சங்கத்தில்
பெற்றுக்கொள்ளுங்கள்

தொலைபேசி இல. பண்டத்தரிப்பு 888
பண்டத்தரிப்பு 36

(5ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு...

இயக்கத்தின் வேர்கள் தோற்றம் பெற்றன. மேலும், இக்காலத்திலேயே புரட்சி குறித்த உணர்வலைகள் உலகெங்கணும் பரவத் தொடங்கியிருந்தன. அதன் உள்ளார்ந்த கவர்ச்சியினாலும், பிரயோக வசதி காரணமாகவும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் சமூக இயக்கங்களின் பிரதான குவிமையமாக கூட்டுறவு மாறியது. உதாரணமாக, கைத்தொழிற் புரட்சியின் பின்னர் ஒடுக்கப்பட்ட நிலைமையிலிருந்த தொழிலாள வர்க்கம் 'கூட்டுறவில்' மீட்சியைக் கண்டது, ரொபேட் ஓவன், ''ரொச்டேல் முன்னேடிகள்'' போன்ற சமூக சீர்திருத்தவாதிகளை கூட்டுறவு இயக்கத்தின் பிதாமகர்களாகக் கூறலாம். தம் உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் நோக்கில் நிறுவப்பட்ட நலன் புரி, சிக்கனச் சங்கங்களின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் இவர்களே காரண கர்த்தர்களாக இருந்தனர். மறு வார்த்தைகளில் கூறுவதாயின் கூட்டுறவுக் கோட்பாட்டை நிருற்றி வளர்க்கும் பணியை இவர்கள் நிறைவு செய்தனர்.

''ரொச்டேல் சம வினியோக முன்னேடிச் சங்கம்' ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டுறவின் முதலாவது வெற்றிகர முயற்சியாகக் கருதப்படுகின்றது. ''நிதி நலன்களைப் பெறவும், உறுப்பினர்களது சமூக, வீட்டு நிலைமைகளை விருத்தி செய்யவுமான'' சங்கமொன்றை 1844ல் லண்டனுக்கு வடக்கே அமைந்திருந்த ரொச்டேல் கைத்தொழில் நகரில் வாழ்ந்த 28 பேர் தாபித்துக்கொண்டனர். ''ரொச்டேல் முன்னேடிகளில்'' பலர் கைத்தறி நெசவாளர்களாக இருந்தனர். புதிய மின்தறிகளின் அறிமுகம் அவர்களைப் பெருமளவில் பாதித்தது. கைத்தொழில், விவசாயப் புரட்சிகள் 19ம் நூற்றுண்டு ஐரோப்பிய மக்களிடையே ஏற்படுத்திய புதிய பிரச்சனைகளாலும், நிலைமைகளாலுமே கூட்டுறவு இயக்கம் குறித்து எண்ணக்கரு உதயமானது. இத்தகைய ஆரப்ப காலச் சங்கங்களின் பிரதான சிறப்பியல்பு யாதெனில், இவை மூலதனத்தாலன்றி மக்களாலேயே கட்டுப்படுத்தப்பட்டு வந்தமையாகும். சிறப்பான விதிகளும், பிரயோகமுமே ரொச்டேல் சங்கத்தின் வெற்றிக்கான காரணமாகக் கூறப்படுகின்றது. தொண்ணூறு வருடங்களின் பின்னர் அவை ரொச்டேல் கோட்பாடுகளாகப் புகழ் பெற்றன.

ஐரோப்பா முழுவதிலும் இவ்வாறாக இவ்வியக்கம் பரவத் தொடங்கியது; குறிப்பாக ஜேர்மனியில் கூட்டுறவுக் கடன்துறையில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டு வந்தது. கூட்டுறவுக் கடன் சங்கத்துக்கான அத்திவாரம், 1840க்களில் ஜேர்மனியில் ரபாயிசேன் என்பவரால் இடப்பட்டது. அவர் 1848ல் ஒரு சிறு தொகைப் பணத்தைச் சேர்த்து ஒரு கூட்டுறவு பேக்கறியைத் துவக்கிஞர். அந்த பேக்கறியிலிருந்து கிராமவாசிகள் அப்போதைய விலையை விடவும் அரைப்பங்கு விலைக்குப் பாணைப் பெற்றுக்கொண்டனர். அடுத்து கூட்டுறவுக் கால் நடைக் கொள்வனவுக் கடையொன்று தாபிக்கப்பட்டது. மேலும், 1849ல் அவர் 300 பவுணகளைச் சேர்த்து ஒரு கிராம வங்கியைத் தாபித்தார். விவசாயிகள் இவ்வங்கியின் விதிகளுக்கு இணங்கும் பட்சத்தில அவர்களது தேவைகளுக்கு கடன்கள் வழங்கப்படுமென்றும் அவர் உத்தரவாதமளித்தார். இத்தகைய வங்கி அமைப்பொன்றின் வளர்ச்சி ஆரம்பத்தில் மிகச் சிறிதளவாகவே இருந்தது. ஆயினும் அடுத்து வந்த நாற்பதாண்டு காலத்தில் இத்தகு வங்கிகளில் ஏற்பட்ட துரித விஸ்தரிப்பு பிரமிப்பூட்டுவதாயிருந்தது 1891 அளவில் இத்தகைய வங்கிகள் 685 இருந்தன. அரசு பெருமளவிலான நிதிகளாலும், இயந்திர உபகரணங்களாலும் விவசாயிகளுக்குச் செய்ய முடியாத உதவிகளை அவர்களைக் கொண்டே அவர்களுக்குச் செய்விக்கலாம் என்பதனை ரயிபயாசின் கூட்டுறவுக்கடன் இயக்கம் நிரூபித்துக் காட்டியது.

ரயிபயாசின் இயக்கம் ஜேர்மனியின் விவசாயிகளுக்கு உதவிற்று: ரொச்டேல் முன்னேடிகள் இயக்கம் மூலம் இங்கிலாந்தின் கூட்டுறவாளர்கள் பயனடைந்தனர். ஆனல் இதே அமைப்பு நம்நாட்டின் உழவர் விவசாயிகளுக்கும், கூட்டுறவாளர்களுக்கும் உதவவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள பல்லாண்டுகள் பிடித்துவிட்டன. இந்நாட்டு விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகள் (பாரம்பரிய அமைப்புக்களின் அஸ்தமனத்துக்கு வழிவகுத்த) குடியேற்ற ஆதிக்கத்திஞல் தோற்றுவிக்கப்பட்டவையாகும்.

அதன் ஆரம்ப காலத் தத்துவார்த்தக் கோட்பாடுகள் சில ஒழிக்கப்பட்ட நிலையிலும்கூட, ''கூட்டுறவு' விடுக்கும் தூது அலைகடலுக்கப்பால் அமெரிக்காவிலும், ஆசியாவிலுமிருந்த குடியேற்ற நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தின் மூல வடிவம் அதன் ஆரம்ப நாட்களில் இங்கிலாந்து. பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்கண்டிநேவியா போன்ற நாடுகளில் பெருவளர்ச்சி கண்டது. சில்லறை, மொத்த வியாபாரம், விவசாய உற்பத்திகள் சந்தைப்படுத்துதல், உள்வீடுகள் வழங்கல் போன்ற துறைகளில் இவ்வியக்கம் ஊடுருவி வியாபித்துச் சென்றது. ஆயினும், இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற உலக மகாயுத்தம், அதனையடுத்து வந்த உலகளாவிய பொருளாதார மந்தம் என்பவற்றைத் தொடர்ந்து இவ்வளர்ச்சி இடை நிறுத்தப்பட்டது,

இதே நேரத்தில் ஆசியாவில், இவ்வியக்கம் பல்வேறு நாடுகளிலும் வேரூன்றத் தொடங்கியது. குறிப்பாக விவசாயம், கடன் கூட்டுறவு போன்ற துறைகள் முக்கியம் பெற்றன 1938ன் முடிவில் சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின (ICA) ஆசிய அங்கத்துவ நாடுகளில் 187,365 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன; இவற்றில் பெரும் பகுதி இந்தியாவில் அமைந்திருந்தன. இந்நாடுகளின் நிலைமைகள் வேண்டி நின்றதன் பிரகாரம் அரசாங்கங்கள் கடன் நுகர் பொருள் விநியோகப் பொறுப்புக்களைக் கூட்டுறவுச் சங்கங்களிடம் வழங்கின. சிறு உற்பத்தியாளர்களதும், பாவனையாளர்களதும் நலனைக் கருத்திற் கொண்டே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது உலகப் போர் தொடங்கியதையடுத்து பல நாடுகளில் இவ்வியக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டதெனினும், குறிப்பாக ஸ்ரீலங்காவைப் போன்ற ஆசிய நாடுகள் நுகர்வுப் பொருள் விநியோகத்தில் ஏற்படும் தடங்கல்களைத் தடுக்கும் ஒரு பிரதான மார்க்கமாக இவ்வியக்கத்தைக் கருதின. போரினையடுத்து வந்த வருடங்களில் பல நாடுகள் சுதந்திரம் பெற்றன, இதனையடுத்து, இந்நாடுகள் புதிதாக வென்றெடுத்த சுதந்திரத்தினை அர்த்தப்படுத்தும் நோக்கில் தம் சமூக, பொருளாதார ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்யுமுகமாக கூட்டுறவை மேலும்மேலும் ஊக்குவித்தன. 1948ன் முடிவில் சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தில் 343,315 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன; இவற்றுள் 203,638 சங்கங்கள் ஆசியாவில் அமைந்திருந்தன. போரின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேசியப் புனர் நிர்மாணப் பணிகளில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள அரசியல் வாதிகளும், கூட்டுறவாளர்களும் முயன்றனர். மேலும், கிராமிய உழவர் விவசாயிகளுக்கும், நகர் சார்ந்த குறை வருமானம் உழைக்கும் குடும்பங்களுக்கும் கூட்டுறவு வழங்கவிருக்கும் அளப்பரிய நன்மைகளை வளர்முக உலகின் பல்வேறு நாடுகளும் உணரத் தொடங்கின. மூன்றுவது உலகில் எழுச்சியடைந்து வரும் புதிய தேசங்கள் ஐரோப்பிய கூட்டுறவு மாதிரிகளில் பெரும் நம்பிக்கை வைத்திருந்தன.

## இலங்கையில் கூட்டுறவு ஆரம்ப காலகட்டம்

கிராமியக் கடன் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் அவசியத்தைக் கருத்தற்கொண்டே இலங்கையில் கூட்டுறவு வளர்ச்சியடைந்தது. எனவே, இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் முதன் காலப் பிரிவு 1911—1942 கடன் இயக்க காலம் என்றழைக்கப்படுகின்றது. கிராமியக் கடன் பிரச்சினையைப் பரிசீலனை செய்து அதனைத் தீர்த்து வைப்பதற்கான முன்மொழிவுகளை வழங்கவென 1960ல் பிரித்தானிய அரசு ஒரு குழுவை நியமனம் செய்தது இக்குழுவின் பணிகளின் விளைவொன்றுகவே 1911ன் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த வளர்ச்சிப் போக்கில் நாம் இரு பிரதான அம்சங்களைக் காண்கின்றேம்.

(1) கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவிப்பதற்கான ஒரு சட்டம் உருவானது. உள்ளூர்ப் பிரச்சினையொன்றுக்குத் தீர்வாக, நிறுவன ரீதியாக இத்தகைய சங்கங்கள் தாபிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மக்களிடையே இருந்து எழவில்லை.

(2) கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்குமென கூட்டுறவுப் பதிவாளர் காரியாலயமொன்று தாபிக்கப்பட்டது. சங்கங்களின் அலுவல்களில் தலையிடும் உரிமை இப்பதிவாளருக்கு வழங்கப்பட்டதுடன், பிரச்சினைகளில் இறுதி முடிவு கொடுப்பவரிடமும் அவர் இருந்தார். மக்களிடையே பூரணமான சுய தங்கியிருத்தலை ஏற்படுத்த வேண்டுமென்பது ஆட்சியாளர்களின் எண்ணமாக இருக்கவில்லை. அக்காலகட்டத்தில் தாபிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களும் இதே மனப்போக்கிலேயே அமைக்கப்பட்டன. எனவே பதிவாளரிடம் பாரிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. கொள்கைரீதியான பல தீர்மானங்கள் சங்கங்களின் அங்கத்துவர்களாலன்றி அரசாங்கத்தைப் பிரதி நிதித்துவப்படுத்திய பதிவாளராலேயே எடுக்கப்பட்டன. 1911ன் கட்டளைச் சட்டத்தின் (2)ம் பிரிவு, கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்வதிலும், கலைப்பதிலும் இறுதித் தீர்மானமெடுக்கும் உரிமை பதிவாளருக்கே இருப்பதாகக் கூறுகின்றது.

ஆரம்ப நாட்களில் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்யும்போது அவற்றின் தகுதி குறித்து பதிவாளர் தனிப்பட்ட முறையில் பார்த்துத் திருப்தியடைந்தார். இவ்வமைப்பின் கீழ், கூட்டுறவுச் சங்கங்களின் உப விதிகளை வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடியவர்கள் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க முடியும். இதன் காரணமாக சமூகத்தின் ஒரு பிரிவினரே கூட்டுறவுச் சங்கங்களிஞல் நன்மையடைந்தனர். எனவே ஆரம்ப கட்டங்களில் இவ்வியக்கம் ஜனரஞ்சகமானதாக இருக்கவில்லை.

கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் இச்சங்கங்கள் சமூகத்தின் வறிறு பிரிவினருக்கு கடன் வழங்குவதில் மட்டுமே கவனஞ் செலுத்தி வந்தன. கடன் சங்கம் கிராமிய வங்கியாக இருந்து வந்தது; தன் உறுப்பினர்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் அது இயங்கி வந்ததுடன், அன்றாட நடவடிக்கைகளில் வங்கித் தத்துவங்களையும் பேணிவந்தது. எவ்வாறுயிருப்பினும். இது சாத்தியமானதாக இருக்கவில்லை. பதிவாளருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் பரஸ்பர உதவி, சுய தங்கியிருத்தல், கூட்டுப் பங்கெடுப்பு போன்ற கோட்பாடுகளுக்கு முரணனவையாக இருந்தன. கூட்டுறவுச் சங்கங்களின் உருவாக்கத்துக்கும், பாதுகாப்புக்கும், அழிவுக்கும் அவரே பொறுப்பாக இருந்தார். கூட்டுறவு இயக்கத்தின் தலைவராகவும், பிரதம பேச்சாளராகவும் அவர் இயங்கி வந்தார். இதன் விளைவாக கூட்டுறவு இயக்கத்தின்மீது அதிகாரிகளது நிழல் பரவத் தொடங்கிற்று; இன்றும்கூட அது நிலவி வருகின்றது.

கூட்டுறவுக் கட்டளைச் சட்டத்துக்கு 1926ல் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் நுகர்வு, விவசாயச் சந்தைப்படுத்தும்சங்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுசெய்யப்படுவதற்கும் 1926ன் கட்டளைச் சட்டம் உதவியது. இக்காலகட்டத்தில் வகைப்படுத்தும் சங்கங்களும், கண்காணிப்புச் சங்கங்களும் உருவாக்கப்பட்டதுடன, கூட்டுறவுத் திணைக்களம் பிறிதொரு இலாகாவாக ஒக்டோபர் 1,1930ல் தாபிக்கப்பட்டது. 1911—1942 காலகட்டத்தில் கூட்டுறவு இயக்கம் தன் முழுக் கவனத்தையும் கடன சங்கங்களிலேயே செலுத்தி வந்தது. இக்கடன் சங்கங்கள் இரு வகைப்படும், வரையறுக்கப்படாத பொறுப்புக்களைக் கொண்ட ரயிபாசின் மாதிரிச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் அமைக்கப்பட்டன; வரையறுக்கப்பட்ட ''நகர வங்கிகள்'' பட்டினங்களில் தாபிக்கப்பட்டன. இக்காலத்தில் தாபிக்கப்பட்ட 2036 சங்கங்களில் 1622 சங்கங்கள் கடன் சங்கங்களாக இருந்தன. சந்தைப்படுத்துதல், தோட்டக் கூட்டுறவுப் பண்டசாலைகள் தெங்குப் பொருள்கள் உற்பத்தியாளர், பாற்பண்ணைக்காரர்கள், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற வேறு வகைச் சங்கங்களும் இருந்தன. இச்சங்கங்கள் பெருமளவில் பரீட்சார்த்தமானவையாக இருந்ததுடன் அவற்றைப் பரவலாக்குவதற்கு எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப் படவில்லை. கடன் சங்கங்கள் மட்டுமே உள்ளூர் நிலைமைகளுக்குப் பெருமளவில் உகந்தவை என்றும் அவற்றினலேயே கிராமியக்கடன் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்றும் அக்காலத்தில் எண்ணப்பட்டு வந்தது.

## இரண்டாம் கட்டம்

இயக்கத்தின் இரண்டாம் கட்டம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் ஆரம்பத்துடன் தொடங்குகின்றது. முதலாம் கட்டத்துடன் ஒப்பிடும்போது 1942க்கும் 1945க்குமிடைப்பட்ட காலத்தில் இயக்கம் துரித வளர்ச்சி கண்டது.

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

# வியாபாரப் பெருக்கக் குழுக்கூட்டம்

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் வியாபாரப் பெருக்கக்குழு வின் ஐந்தாவது கூட்டம் அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்றது. திரு I H. ஹன்டரின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத் தில் சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், மலேசியா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் தென்கிழக்காசிய பிரதேச அலுவலகத்தின் இணை நெறியாளர் திரு. M K பூரி குழுவின் செயலாளராகப் பணியாற்றினர்.

தென்கிழக்காசிய பிரதேசத்தில் கூட்டுறவு வணிகத்தினைப் பெருக்கும் பொருட்டு பின்வரும் தகவுரைகள் செய்யப்பட்டன.

(1) பல்வேறு தேச வணிக நிறுவனங்களின் போட்டியை முறியடிக்கும் பொருட்டு இப்பிரதேசத்திலுள்ள கூட்டுறவு இயக்கங்கள் அனைத்துலக வணிகத்துறையில் கணிசமான முறையில் ஈடுபடல் வேண்டும்.

(2) இயன்றளவில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள உச்ச கூட்டுறவு வணிக நிறுவனங்கள் அனைத்துலக வணிகத்துக்கென தனிவேறான பகுதியினை நிறுவுதல் வேண்டும்.

(3) தேசிய கூட்டுறவு இயக்கங்கள் இப்பிரதேசத்திலுள்ள வேறு நாடுகளின் கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு வணிகத் தூதுக் குழுக்களை அனுப்புதல் வேண்டும்.

(4) இப்பிரதேசத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கிடையே இரட்டைவழி வணிக ஒப்பந்தங்களை உருவாக்கும் சாத்தியப்பாடுகள் ஆராயப்படல் வேண்டும். இது தொடர்பாக கூட்டுக் குழுக்கள் திறுவப்படுவதற்கு ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

## சுவடுகள்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் புகழ் பெற்ற நாவலை எழுதிய பிரபல பிரித்தானிய நாவல சிரியர் E. M வொஸ்ரர் ஆனந்தின் மேற்படி நாவலுக்கு முன்னுரை எழுதியுள்ளர். அந்த நாவல் சம்பந்தமாக வொஸ்ரர் ஆனந்திற்கு உற்சாகமளித்து பல வழிகளிலும் உதவினர்.

இப் புதினங்களை திரு. K. A. அப்பாஸ் 'திமிரர்' என்னும்சஞ்சிகையில் அண்மையில் குறிப்பிட்டுள்ளார்;

— கர்கரப்பிரியா

(7ம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டுறவு. ...

வில் சுமார் 4000 கூட்டுறவுச் சங்கக் கடைகள் தாபிக்கப்பட்டன 1942 ஏப்ரலில், கொழும்பில் ஜப்பான் விமானத் தாக்குதல் நடத்ியதையடுத்து, நடைமுறையிலிருந்த உணவு விநியோக அமைப்பு சீர்குலைந்தது எனவே அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், ஏனைய தட்டுப்பாடான நுகர் பொருட்களையும் விநியோகம் செய்யவேண்டிய அவசரத்துக்காகவே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் நுகர்வாளர் கூட்டுறவு இயக்கம், யுத்தத்தின் விளைவுகளில் ஒன்ருகும். 1942 முதல் 1945 வரையிலான காலப் பிரிவில் நுகர்வாளர் சங்கங்கள் 38இலிருந்து 4,000 ஆக அதிகரித்ததுடன், உறுப்புரிமையும் 17,500 இலிருந்து 101, 570 ஆக அதிகரித்தது. (வளரும்)

நன்றி:பொருளியல்நோக்கு

8-ம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டுறவுத் தந்தை....

பொறித்து அவருக்கு அமரத்துவம் வழங்கியுள்ளது.

சர்வதேச கூட்டுறவின் கொடி எங்கெல்லாம் பட்டொளி வீசிப்பறக்கின்றதோ அங்கெல்லாம் வறுமை, போர், நிறபேதம், அடக்கு முறை போன்ற மனித குலத்தின் வளர்ச்சியைப் பாதிப்பத்தும் தீய சக்திகள் தொடர்ந்தும் நீடிக்கப் போவதில்லை. ஒரு நூற்ருண்டுகாலத்தின் பிரமிப்பூட்டும் சாதனைகளிருந்தும் வலுமிக்க ஓர் உந்து தலைப்பெறும் உலகின் கூட்டுறவாளர்கள், தம்மை அண்மித்து வரும் புதுயுகமொன்றை வரவேற்கப் பலத்த நம்பிக்கையுடன் காத்திருக்கிருர்கள். எனவே, ரொபேட் ஓவன் என்ற தீர்க்கதரிசியின் கருத்துக்கள் காலத்தால் செத்தொழிந்து விடவில்லை.

நன்றி:பொருளியல் நோக்கு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கைத் தேங்காய்த்...

தனியுரிமை நிலவுவதால், நம் நாட்டுத் தேங்காய்த் துருவல் ஐரோப்பியச் சந்தைகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஏற்றுமதித தொகையில் பிரதானமே. ஐரோப்பிய கொள்வனவாளர்களான ஐக்கிய ராச்சியம், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ் நெதர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் 65% 70%க் கொள்வனவு செய்கின்றன. இச் சந்தைகளில் மாத்திரமே நாம் தங்கியிருப்பதனுல் தேங்காய்த் துருவல் வர்த்தகத்தின் எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்கின்றது.

சீனி விலையதிகரிப்புக் காரணமாக, (தேங்காய்த் துருவலின் முடிவுப் பாவனைக்கு சீனி ஒரு துணைப் பொருளாகவுள்ளது ) இக் கொள்வனவாளர்கள் தமது கொள்வனவுத் தொகையைக் குறைப்பின் எமது விற்பனை வீழ்ச்சியடையும். ஆகையால் இந்நாட்டின் தேங்காய்த் துருவல் கைத் மாற்றங்களை 24ம் பக்க அட்டவணை காட்டும். ஸ்ரீ லங்காவினுல் நிறைவு செய்ய முடியாமற்போன கேள்வித் தொகையை பிலிப்பைன்ஸ் கைப்பற்றிக் கொண்டது.

சந்தை நிலைமைகள், கொள்வனவு செய்கின்ற நாடுகளில் இனிப்புப் பண்டங்களுக்கு உள்ள வேறுபட்ட கேள்வி போன்ற பல்வேறு காரணிகளித்தியைய உலக தேங்காய்த் துருவல் ஏற்றுமதிச் சந்தை தளம்பிச் செல்கின்றது. சர்வதேச சந்தை நிலைமைகள் தவிர, தேங்காயின் கிடைப்பட தன்மை, (காயின் உற்பத்தியில்தங்கியுள்ளது) வெளிநாடுகளில் எமது தேங்காய்த் துருவலின் நுகர்வுத் தன்மை என்பன காரணமாகவும் ஏற்றுமதி 30—40 கோடி காய்களுக்கிடையில் மாறிச் செல்கின்றது (1,000 காய்களுக்கு 300 இருத்தல் என்ற அடிப்படையில்; ஆயினும் 1,000 காய்களிற் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ. 16·4 கோடியாகும்; இதனை முன்னெப்போதுமிராத சாதனையொன்றெனக்கூறமுடியும் இதே போன்று 1977லும் 82 3 கோடி ரூபா வருமானம் பெறப்பட்டது.

பிலிப்பைன்ஸில் நிலவிய சாதகமற்ற காலநிலையினுல் தேங்காய் திரப்பலில் ஏற்பட்டவீழ்ச்சியே1968ன் செழிப்பு நிலைமைகளுக்குக் காரணமாயமைந்தது. இதன் விளைவாக பிலிப்பைன்சின் பிரதான கொள்வனவு நாடான ஐக்கிய அமெரிக்கா எமது நாட்டிலிருந்து 13,000 அந்தர் தேங்காய்த் துருவலைக் கொள்வனவு செய்ததுடன் அதிகரித்த கேள்வி காரணமாக கனடாவும், ஐரோப்பிய நாடுகளும் மிக அதிகரித்த தொகையைக் கொள்வனவு செய்தன. சென்ற ஆண்டில் இதே நிலைமைகள் பிலிப்பைன்சுக்கு சாதகமான முறையில் திரும்

ஐக்கிய ராச்சியத்திற்கு தேங்காய்த் துருவல் ஏற்றுமதி 1976 — 77

| | 1978 பெறுமானம் (கி கிராம்) | பெறுமதி (ஸ்டர், பவுண்) | 1977 பெறுமானம் (கி. கிராம்) | பெறுமதி (ஸ்டர், பவுண்) |
|---|---|---|---|---|
| பிலிப்பைன்ஸ் | 17,297 | 565 074 | 87,160 | 5128,036 |
| ஸ்ரீ லங்கா | 153,070 | 4 81,136 | 77, 43 | 5784,115 |

தொழில் பெருமளவிற்கு இந்நாடுகளின் தயவிலேயே தங்கியுள்ளது. உதாரணமாக 1 75ல் உள்நாட்டுக் காரணங்களினுல் அவுஸ்திரேலியா பிலிப்பைன்ஸிடமிருந்து தேங்காய்த் துருவலைக் கொள்வனவு செய்தமையால்' 1974ல் 1,321 தொன்னுகவிருந்த எமது விற்பனை 1975ல் 183 தொன்களாக வீழ்ச்சியடைந்தது. கடந்த வருடத்தில் பிலிப்பைன்ஸ் ஐக்கிய ராச்சிய ஐரோப்பியச் சந்தைகளுக்கு வழங்கல் செய்தமையால் வர்த்தகநிலைமைகளில் ஏற்பட்ட கான தயாரிப்பு பருவம், பிரதேசம் என்ற அடிப்படையில் வேறுபடுகின்றது; நியாயமான கணிப்பீடுகள் 300 இருத்தல்கள் எனக் காட்டுகின்றன.) 1965—1977 காலகட்டத்திற்குள்ளான பதின்மூன்று வருட காலத்திற்குள் 1968ல் 51.7 கோடிகாய்களாக வழமைக்கு மாறுன அதிகரிப்பு ஏற்பட்டது; இது 1973ல் 28 5 கோடி காய்களாக வீழ்ச்சியடைந்தது.

1968ல் ஏற்றுமதி செய்யப்பட்ட (மிகக்கூடிய தொகையான) 70,000 தொன் தேங்காய்த் துருவலின் பிச் சென்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நன்றி:பொருளியல்நோக்கு

(வளரும்)

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

## முகாமைபற்றி.....

ஒரு பொதுமை நிலவுகின்றது சில துறைகளிலே அவுஸ்ரேலியா முன்னேறியிருக்கலாம். ஆனல் வேறு துறைகளில் நாம் வேறு நாடுகளின் அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளலாம்.

# கிராமப்புறத் தொழிற்பயிற்சி நிலையத் திட்டம்

பங்களாதேஷில் 50 இராமப்புறத் தொழிற் பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில உதவியுடன் செயத் திட்டமொன்று விரைவில் நடைமுறைப் படுத்தப்பட இருக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் வாழும் இளைஞர்கள் தமது சொந்த ஊர்களிலேயே தொழில் நுட்பவேலை வாய்ப்புக்களைப் பெற முடியும்.

பங்களாதேஷின் கிராமப் புறங்களை—அங்குதான் 85 வீத மக்கள் வாழ்கின்றனர்—அபிவிருத்தி செய்வதற்கு தொழில் நுட்ப அறிவு பெறறவர்களைப் பயிற்றுவிப்பதற்கு பங்களா'தேஷ் அரசாங்கம் கையாண்டு வரும் கொள்கைக்கு அமைவாகவே இத் திட்டம் அனுபவம் வாய்ந்த தொழிலநுடப ஆலோசகர்களால் வகுக்கப்பட்டு வருகிறது.

இப்பொழுது பங்களாதேஷில் இயங்கிவரும் தொழில் நுடப பயிற்சி நிலையங்கள் நகரப்புறம் சார்ந்த பாட விதானங்களைக் கொண்டிருப்பதால் கிராமப் புறங்களுக்குத் தேவையான அடிபபடை ஆற்றல்களை அவை உருவாக்குவதில்லை. இத்தகைய ஆற்றல்கள் உருவாக்கப்பட்டால்தான் விளைவாக்கம் பெருகுவதோடு வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும்.

கிராமப் புறங்களுக்குத் தேவையான விவசாய இயந்திரங்களைப் பழுது பார்ப்போர் உணவுகளைப் பதனிட வல்லோர், குடிசைக் கைத்தொழிலாளர் ஆகியோரை இவ்வுத்தேச கிராமப்புற பயிற்சி நிலையங்கள் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மில்க்வைற் மாதக்கலண்டர்
1979




25 மில்க்வைற் நீலசோப் அல்லது
5 பார்சோப் அல்லது
10 நீப்சோப் அல்லது
10 சலவைப்பவுடர்
மேலுறைகளை அனுப்பி மேற்படி அழகிய மாதக் கலண்டரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் த. பெ. இல: 77 - யாழ்ப்பாணம்.

யா. மாநகர ப. நோ கூ. ச. கிளையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் .644-78
Registered as a News Paper at the General Post Office, Sri Lanka Under No. QB/8965/78